வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 27.07.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 236 | பக்கங்கள் : 16

# குடாநாட்டுக்குப் புதிய அரச அதிபராக சிங்களவரை நியமிக்க அரசு தீர்மானம்

## உடன் நிறுத்துமாறு கோரி பிரதமருக்கு சம்பந்தன் எம்.பி. நேற்று அவசர கடிதம்



கொழும்பு, ஜூலை 27

“தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட அரச அதிபராக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும். இந்த நியமனத்தை உடன் நிறுத்துங்கள்.”

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்துக்குத் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட இருக்கின்றார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்த நியமனத்தை

15

## செப்ரெம்பர் 10 இல் இலங்கை வருகிறார் சீனப் பிரதமர்

கொழும்பு, ஜூலை 27,

சீனப் பிரதமர் லீ கெக்கியங் இலங்கைக்கு வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு போர்ட் சிட்டியுடன் சார்ந்த ஆவணங்களை இறுதிப்படுத்தி சீனாவின் பங்குகள் அடங்கிய ஆவணத் தில் கையெழுத்திடவே அவர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கரவெட்டியில் ஆலயத் திருவிழாவில் பங்கேற்ற 49 பேருக்குக் கொரோனா

## கிராமம் ஒன்றை முடக்க நடவடிக்கை

வடமராட்சி, ஜூலை 27.

யாழ்., வடமராட்சி, கரவெட்டி தெற்கில் அமைந்துள்ள முருகன் ஆலயம் ஒன்றில் அண்மையில் திருவிழாவில் பங்கேற்ற பக்தர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

15

## அரச ஊழியர்களை ஓகஸ்ட் 1 முதல் பணிக்கு அழைப்பதற்குத் திட்டம்?

கொழும்பு, ஜூலை 27,

அனைத்து அரச ஊழியர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அழைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## சகல மாவட்டங்களிலும் டெல்டா தொற்றாளர்கள்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் இருக்கலாம் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவிய

15

## ரிஷாத்தின் மனைவி உள்ளிட்ட நால்வருக்கும் விளக்கமறியல்

### சிறுமியின் உடலைத் தோண்டி மீண்டும் பரிசோதனை நடத்துவதற்கும் உத்தரவு

கொழும்பு, ஜூலை 27

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரையில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

15

## புதிய வாக்காளர் பதிவுக்கான காலக்கெடு 30 ஆம் திகதி!

### தவறவிடவேண்டாம் என வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் புதிய வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளவர்கள் தங்கள் பெயர்களைத் தேருநர் இடாப்பில் சேர்த்துக் கொள்வதற்கான பதிவுகளை யூலை 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டும் என அறி வித்துள்ளது.

15



### மரண பரிசோதனையில் சந்தேகம்:

## ஹிஷாலினியின் பெற்றோர் ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த மலையகச் சிறுமி ஹிஷாலினியின் பெற்றோர் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

“ஹிஷாலினியின் மரண பரிசோதனை தொடர்பில் எமக்குச் சந்தேகம் நிலவுகின்றது. எனவே, மீள்பரிசோதனை நடத்தப்பட வேண்டும்” என்று அந்த முறைப்பாட்டில் அவர்கள்

15

## ரிஷாத்திடமும் வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 27.

டயகம சிறுமியின் மரணம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரிஷாத் பதியுதீன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில் பணிப் பெண்ணாக வேலை செய்த போது, எரிகாயங்களுக்குள்ளாகி சாவடைந்த தலவாக்கலை - டயகமவைச் சேர்ந்த 16 வயதான ஹிஷாலினி என்ற சிறுமியின்

15

## 30 ஆண்கள் உட்பட 48 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 48 பேர் மரணித்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல்

15

## நேற்று 1,653 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் மேலும் 1,653 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை

15

## எனக்கு மொழி ஒரு பிரச்னை இல்லை

### வடக்கின் புதிய செயலாளர் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், ஜூலை 27

“மக்களுடன் நான் கடமையாற்றும்போது எனக்கு மொழி ஒரு பிரச்சினையான விடயமல்ல.”

- இவ்வாறு வடக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளர் சமன் பந்துலசேன தெரிவித்தார்.

யாழ்., கைதடியிலுள்ள வடக்கு மாகாண

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அது ஓர் இரண்டு மாடி வீடு. கீழ் தளம் ஒருவருக்குச் சொந்தமானது. மேல் தளம் இன்னுமொருவருக்கு சொந்தமானது. நமது தொடர்மாடி வீடுகள் போல. ஆனால், இந்த மாடி வீட்டில் இரண்டு வீடுகள் மாத்திரமே இருந்தன.

மாடியில் இராணுவ அதிகாரி ஒருவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். அவரின் மனைவி அடிக்கடி கல் உரலில் மாவு இடிப்பாள். அந்தச் சமயத்தில் கீழ் வீட்டில் இருப்பவருக்கு பெரிய தொந்தரவாக இருக்கும். மாவு இடிக்கும்போது வீடே அதிரும். இடியோசை மாதிரி சத்தமும் கேட்கும்.

கீழ்வீட்டுக்காரர் இரண்டு மூன்று தடவை கொஞ்சம் மெதுவாக மாவு இடிக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், அந்த இராணுவ அதிகாரியோ, “இது எனது வீடு. ஆகவே, இது எனக்குச் சொந்தமானது. என் வீட்டில் என் மனைவி எப்படி வேண்டுமானாலும் மாவு இடிப்பாள். அதைக் கேட்பதற்கு நீ யார்?”, என்று அதட்டினார்.

ஒருநாள் கீழே இருந்தவர், தன் வீட்டுப் பகுதியின் சுவரை இடித்துக் கொண்டிருந்தார்.

சத்தம்கேட்டு மேலே இருந்தவாறு இராணுவ அதிகாரி கேட்டார், “கீழே என்ன செய்கிறாய்?” என்று.

அதற்கு கீழ் வீட்டுக்காரர் சொன்னார், ”என் வீட்டை முற்றிலுமாக இடித்துத் தள்ளிவிட்டுப் புதிதாகக் கட்டத் தீர்மானித்திருக்கிறேன்”, என்றார்.

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த இராணுவ அதிகாரி, “என்னைய்யா முட்டாளாக இருக்கிறீரே, கீழ் வீடு முழுவதையும் இடித்தால் மேல் வீடு என்ன ஆகும் என்று யோசித்தீரா?”, என்று கோபத்தோடு கேட்டார்.

“மேல் வீட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். எனக்குச் சொந்தமான வீட்டை நான் இடிக்கிறேன். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை”, என்று கூறி விட்டு சுவரை இடிக்கத் தொடங்கினார்.

பதறிப்போன அந்த இராணுவ அதிகாரி, “நாம் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வதுதான் நல்லது. நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம்”, என்றார்.

வடக்கு மாகாண சபைக்கு முதல்தடவையாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற பெருமையைப் பெற்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலர் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடிய நிகழ்வு ஆச்சரியத்திற்கு உரியதுதான்.

அதிலும் முக்கியமாக அண்மையில் ரெலோ ஏற்பாட்டில் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியினருடனான சந்திப்பில், தமிழ் அரசு சார்பில் கலந்துகொள்வார் என்று கூறப்பட்ட போதிலும் விக்னேஸ்வரனைச் சந்திப்பதைத் தவிர்த்த அவைத் தலைவர் சிவஞானமும், முதல்வர் விக்னேஸ்வரனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் முடிவில் வடக்கு மாகாண தலைமைச் செயலராக நியமிக்கப்பட்ட சிங்கள இனத்தவரை திரும்பப்பெற்று, தமிழ் அதிகாரியை நியமிக்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்புவதென்று முடிவெடுத்திருந்தனர்.

அவர்களுடையை கோரிக்கை சிங்களவர் வேண்டாம் தமிழரை நியமியுங்கள் என்பதுதான்.

லயனல் பெர்னாண்டோ யாழ். அரச அதிபராக இருந்த போது அவரின் தாயார் மரணமானார். யாழ். நகரில் கறுப்புக் கொடி, ஹர்த்தால், யாழ். சென். பற்றிக்ஸ் வீதி சேமக் காலையில் அடக்கம். பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர். அவரை தமிழ் அரசு கட்சி எதிர்க்கவில்லை.

ஆனால், இப்போது சிங்கள இனத்தவர் நியமிக்கப்பட்டதும் நமது தலைவர்கள் எல்லோரும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அவர்கள் தமது கோரிக்கைக்கு, அவரைவிட மூத்த தமிழ் அதிகாரிகள் இருக்கும்போது எதற்காக ஒரு கனிஷ்ட அதிகாரியை நியமிக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பியிருந்தால் அதில் நியாயம் இருந்திருக்கும். ஆனால்,அவர்கள் முன்வைப்பது சிங்களவர் வேண்டாம், தமிழரை நியமியுங்கள் என்பதுதான்.

நாட்டின் நீதித்துறையில் அதி உச்ச பதவி, சட்டமா அதிபர் பதவி. அந்த பதவிக்கு அண்மையில் இந்த அரசு ஒரு தமிழரை நியமித்தபோது எந்த ஒரு சிங்களவரும் அதனை கேள்விக்கு உட்படுத்தவில்லை.

அதிகம் ஏன்? தமிழ் மக்களில் மத ரீதியாக கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினர்தான். ஆனால், ஒரு கிறிஸ்தவர் தமிழ் அரசுக் கட்சியின் அதிகாரம் மிக்க தரைலவராக இருப்பதைக் கூட இதுவரை எவரும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. ஆனால், சிங்களவர் வடக்கில் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டமையை மாத்திரம் கேள்விக்கு உட்படுத்துகின்றனர்.

கீழ் தளத்தில் குடியிருந்தவர், தனது பிரச்னையை எப்படி சாமர்த்தியமாக கையாண்டாரோ, அதேபோல இதுபோன்ற தருணங்களில் சாமர்த்தியமாக காய்நகர்த்த வேண்டியது நமது தலைவர்களின் பொறுப்பு. நாட்டில் தமிழர்கள் அதி உயர்பதவிக்கு வருவதற்கு எதிராக சிங்கள மக்களை உசுப்பி விடுவது போன்ற செயல்களை செய்வது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# க.பொ.த. சாதாரணதர பரீட்சை அடுத்த ஆண்டு பெப்ரவரியில்

கொழும்பு, ஜூலை 27

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை அடுத்த ஆண்டு நடைபெறும் என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முதல் மார்ச் 03 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேலும் உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் டிசெம்பர் 10 வரை நடை பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

## அம்பாறையில் 171பேர் உட்பட கிழக்கில் 401 பேருக்கு தொற்று

அம்பாறை, ஜூலை 27

அம்பாறையில் 170 பேர் உட்பட கிழக்கு மாகாணத்தில் நேற்று முன் தினம் 211 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் - 170 பேருக்கும் மட்டக்களப்பில் - 40 பேருக்கும் திருகோணமலையில் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## துணிச்சலான...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது அழுத்தங்களுக்குள்ளாகி பதவியிறக்கம் செய்யப்பட்ட விடயம் மற்றும் 2015ஆம் ஆண்டில் நல்லாட்சி என்ற ஆட்சியமைப்பை கொண்டுவருவதிலும் ராஜமகேந்திரனுடைய ஊடகத் துறைசார்ந்த ஆளுமை குறப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்தது.

இதுதவிர, 2018ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கைப் பாராளுமன்றம் ஒரு நெருக்கடி நிலைக்குள்ளாகியபோது அதுகுறித்த விடயங்களையும் எவ்விதபக்கச் சார்புமின்றி ஊடகத்துறைக்கு ஓர் ஊன்றுகோலாக மகாராஜா நிறுவனத்தின் தொலைக்காட்சி சேவைகள் தமது பங்களிப்பை வழங்கியிருந்தன.

இதன்மூலம் கைத்தொழில் துறை மாத்திர மல்ல ஊடகத் துறையிலும் ஒரு ஜாம்பவான் என்ற பெருமைக்குரியவராக ராஜேந்திரன் ராஜமகேந்திரன் மதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு தொழிலதிபராக இருந்து இலங்கை யில் ஏனைய தொழிலதிபர்கள் சிந்தித்திருக்காத விதத்தில் ஊடகத்துறையிலும் தனது தனித்துவத்தை நிலைநாட்டி இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார் ராஜேந்திரன் ராஜமகேந்திரன்.

### கல்வி tv CHANNEL-1

**26.07.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி tv CHANNEL - 2

**26.07.2021**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
27.07.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# யார் காரணம் - மக்களா அல்லது அரசியல்வாதிகளா?

வடக்கு மாகாணத்திற்கு சிங்கள மொழிபேசும் ஒருவர் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமையை தொடர்ந்து தமிழ் அரசியல்வாதிகள் நித்திரையால் எழுந்திருக்கின்றனர். அரசாங்கம் அவ்வப்போது செய்யும் இவ்வாறான செயல்பாடுகளுக்கு எதிர்வினையாற்றும் காரியத்தை மட்டுமே, தமிழ் அரசியல்வாதிகள் செய்து வருகின்றனர். ஒன்றில் அறிக்கைவிடுவது அல்லது பாராளுமன்றத்தில் ஆவேசமாக பேசுவது - இதற்கு அப்பால் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஏதாவது செய்கின்றனவா?

தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமை இன்மையை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்வதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கின்றார். தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மை காணப்படுகின்றதா அல்லது தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளால் தமிழ் மக்கள் பிரிந்து கிடக்கின்றனரா? 2009இல் பேரழிவுகளுடன் யுத்தம் நிறைவுற்ற போது, தமிழ் மக்களுக்கு முன்னால் தலைமை என்று கூறிக்கொள்வற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால், இன்று தமிழ்த் தேசியத்தை பாதுகாப்பதாகக் கூறி, பத்து கட்சிகள் இருக்கின்றன. இதற்கு யார் காரணம் மக்களா அல்லது அரசியல்வாதிகளா?

இன்று வரையில் கூட்டமைப்பின் பேச்சாளரை ஒற்றுமையுடன் தீர்மானிக்க முடியவில்லை. உத்தியோகபூர்வமான பேச்சாளர் ஒருவர் இல்லாமலேயே கூட்டமைப்பு இயங்கிவருகின்றது. இதற்கு யார் காரணம் அரசியல்வாதிகளா அல்லது மக்களா? ஒன்றாக தேர்தலில் போட்டியிட்டு கூட்டமைப்பாக இயங்கிவரும் நிலையிலும் கூட, பாராளுமன்றத்தில் நேரம் ஒதுக்குவதில்கூட, ஒற்றுமையுடன் செயல்பட முடியாமல் இருப்பதற்கு யார் காரணம் - அரசியல்வாதிகளா அல்லது மக்களா?

விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரையில் அவர்களின் தீர்மானங்களுக்கும், முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு அமைதியாக இருந்த கூட்டமைப்பினர், 2009 மே மாதத்திற்கு பின்னர் தங்களுக்கிடையில் முட்டி மோதிக் கொண்டதற்கும், கொள்கை வாதங்கள் பேசிப் பிரிந்ததற்கும் யார் காரணம் - அரசியல்வாதிகளா அல்லது மக்களா? ஒரு கட்டமைப்புக்குள் இருந்தவர்களே கஜேந்திரகுமார் அணி, விக்னேஸ்வரன் அணி, சுரேஷ் பிறேமச்சந்திரன் அணி என்று தனியான கட்சிகளாக இயங்கிவருகின்றனர். இதற்கு யார் காரணம் - அரசியல்வாதிகளா அல்லது மக்களா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்யுங்கள். கட்சிகளிடையே ஒற்றுமையை பாதுகாப்பதற்கு அதுதான் ஒரே வழியென்று பலரும் ஆலோசனைகளை கூறியபோதும் அனைத்தையும் நிராகரித்து, தமிழ் அரசு கட்சியின் தனித்துவம் பற்றிப் பேசியவர்கள் யார் - அரசியல்வாதிகளா அல்லது மக்களா?

வரலாறு நெடுகிலும் தமிழ் மக்கள் ஒற்றுமையின் பக்கமாகவே இருந்திருக்கின்றனர். ஒற்றுமையையே வலியுறுத்தி வந்திருக்கின்றனர். இப்போதும் கூட்டமைப்பு பிரதான கட்சியாக இருப்பதற்கு மக்கள் ஒற்றுமையை விரும்புவதே காரணமாகும். அதேவேளை கடந்த பொது தேர்தலில் மக்கள் சிதறியமைக்கு கட்சிகள் அவர்களை பிரித்தமையே காரணமாகும். மக்களை பிரித்து, பிளவுபடுத்தி, தமிழ்த் தேசிய அரசியலை பலவீனப்படுத்துபவர்கள் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளே அன்றி, மக்கள் அல்ல. தமிழ் மக்கள் பிளவுற்றிருப்பதற்கு முழுக் காரணமும் அரசியல்வாதிகளையே சாரும். இதனை எப்போது தமிழ்த் தேசியவாதிகள் விளங்கிக் கொள்கின்றனரோ, அப்போதுதான் தமிழ்த் தேசிய அரசியல் மீளவும் எழுச்சியுறும். அதுவரையில் அனைத்திலும் அரசாங்கமே வெற்றிபெற்றுக் கொண்டிருக்கும்.

# துணிச்சலான ஊடக ஆளுமையை வெளிப்படுத்திய தொழிலதிபர்!

- அலசுவது இராஜதந்திரி -

ஊடகத்துறை தொண்ணூறுகளில் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்த காலத்தில் எந்த ஓர் ஆட்சியாளருக்கும் அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய வகையில் ஊடகத்துறையில் ஒரு சுதந்திரமான போக்கைக் கொண்டுவருவதில் முன்னின்றவரே மகாராஜா தொழில் நிறுவனங்களின் தலைவராக இருந்து இரு தினங்களுக்கு முன்னர் காலமான ராஜேந்திரன் ராஜமகேந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது 78 வது வயதில் காலமான ராஜேந்திரன் ராஜமகேந்திரன் இலங்கையில் ஒரு முன்னணி தொழிலதிபராக விளங்கியிருந்தார். இலங்கை சுதந்திரமடைய முன்னர் பல்வேறு நிறுவனங்கள் ஆங்கிலேயர்களால் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் நிறுவப்பட்ட முன்னணி உள்நாட்டு நிறுவனங்களில் மிகப்பிரபல்யமானதாகவே மகாராஜா நிறுவனம் விளங்கியிருந்தது.

தனது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட மகாராஜா நிறுவனத்தை தனது 21ஆவது வயதில் தந்தையாரின் இழப்பையடுத்து தமது சகோதரருடன் இணைந்து ஒரு வர்த்தக, கைத்தொழில் சாம்ராச்சியமாகவே ஸ்தாபித்திருந்தார் ராஜேந்திரன் ராஜமகேந்திரன்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்று சுயமாகவே தனது தொழில் முயற்சி சார்ந்த அறிவைப்பெற்று பல்வேறு துறைகளிலும் மகாராஜா நிறுவனத்தை வெகுவிசாலமாகவே மிளிரவைத்திருந்தார் ராஜேந்திரன் ராஜமகேந்திரன்.

**பரந்த பார்வை**

இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் பரந்த கண்ணோட்டத்தோடு தொழில் நிறுவனங்களில் சகல இலங்கையர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை ராஜேந்திரன் ராஜமகேந்திரன் வழங்கியிருந்தார்.

மகாராஜா தொழில் நிறுவனங்களில் பணியாற்றியவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள இனத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திறமைசாலிகளுக்கும், தொழில்நுட்ப ரீதியான அறிவுபடைத்தோருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி வேலை வாய்ப்புக்களை ராஜமகேந்திரன் தமது சகோதரருடன் இணைந்து வழங்கியிருந்தார். இலங்கையில் அனைத்து இனத்தவருக்கும் அதிகளவு வேலை வாய்ப்புக்களை வழங்கிய ஒரு தனியார் நிறுவனமாக மகாராஜா நிறுவனம் விளங்கியிருந்தது.

ஊடகத்துறையிலே இவர் புரிந்த சாதனை மிகவும் குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது. தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் சிரச என்ற சிங்களமொழி தொலைக்காட்சி சேவையையும் பின்னர் எம். ரீ. வி. என்ற ஆங்கில தொலைக்காட்சி சேவை என்பவற்றை ஆரம்பித்து பின்னர் சக்தி தமிழ் தொலைக்காட்சி சேவை என்பவற்றை ஊடகத்துறையின் உயர்வான பாரம்பரியங்களையும் சுதந்திரத்தையும் பேணும் விதத்தில் ஸ்தாபித்திருந்தார்.

**ரூபவாஹினி ஆரம்பம்**

இலங்கையில் 1978ஆம் ஆண்டில் தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினி ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியோடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.



இலங்கையின் முதலாவது தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினி அரச கட்டுப்பாட்டிலேயே இயங்கியதோடு மாற்றுத் தரப்பினரின் விமர்சனங்களுக்கும், கருத்துக் கண்ணோட்டங்களுக்கும் இடமளிக்காததாகவே ரூபவாஹினி ஆட்சியிலிருப்போரின் ஒளிபரப்பு நிறுவனமாக விளங்கியிருந்தது.

ஆனால், ராஜமகேந்திரனால் ஆரம்பிக்கப்பட்ட எம். ரீ. வி., சிரச, சக்தி தொலைக்காட்சி நிறுவனங்களின் பார்வை வித்தியாசமானதாகவே காணப்பட்டது.

மாற்றுக்கருத்துக்களுக்கும் அரசாட்சியிலிருப்போரை விமர்சிப்பதிலும் இந்த தொலைக்காட்சி நிறுவனங்கள் ஏனைய தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்தன.

மூவினங்களையும் - மும்மொழிகளையும் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு ஊடகத்துறையின் சூக்குமங்களையும் நெளிவுசுழிவுகளையும் நல்லமுறையில் புகட்டுவதாக மகாராஜா நிறுவனத்தின் ஊடக ரீதியிலான பங்களிப்பு விளங்கியிருந்தது.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தில்கூட மகாராஜா நிறுவனத்திற்கு கயவர்களால் தீ வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2009ஆம் ஆண்டு சக்தி, சிரச ஊடக வலையமைப்பின் கலையகத்திற்கும் தீ வைக்கப்பட்டிருந்தது.

ராஜேந்திரன் ராஜமகேந்திரனுக்கும் கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும் அவர் எவ்வகையிலும் எந்தவோர் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாதவராகவே தனது கடமைகளை துணிச்சலோடு மேற்கொண்டிருந்தார்.

ஊடகத்துறையில் ராஜேந்திரன் ராஜமகேந்திரனால் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சி சேவைகள்கூட ஆட்சியாளர்களின் கடும்விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்தன.

**துணிச்சலான ஊடக ஆளுமை**

ஆனால், ஊடகத்துறையில் அவர் வெளிப்படுத்திய ஆளுமை அவரின் தொலைக்காட்சி ஊடக நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விமர்சனங்களையும் ஆட்சியதிகாரங்களில் இருப்போர் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நிகழ்ச்சி அமைப்புக்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க, இப்போதைய பிரதமர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய முயற்சிகளில் தாமதமான வெற்றி கிடைக்கும். இடமாற்றத்திற்கான வாய்ப்புகள் இப்போதைக்கு இல்லை. பணியிடத்தில் பணிவாக இருப்பதால் நற்பெயர் கிடைக்கும்.

**இடபம்**
மனதிற்கு இனிய சம்பவம் நடக்கலாம். குடும்பத்தினரால் பெருமை சேரும். இழந்த நட்பு ஒன்றைப் புதுப்பித்துக் கொள்வீர்கள். மங்கல நிகழ்ச்சிக்கான அறிகுறி தென்பட ஆரம்பிக்கும்.

**மிதுனம்**
உறவினரிடையே இருந்த சர்ச்சை சாதகமாக முடியும். தந்தை நலம் பெறுவார். பழைய தொல்லைகள் தீரும். பிள்ளைகளால் நிம்மதியடைவீர்கள். பேச்சிலும் செயலிலும் கவனம் இருப்பது நல்லது.

**கடகம்**
புதிய தொழில், பணி வாய்ப்பு கிடைத்தால் யோசித்து முடிவெடுங்கள். பிரச்னையில் சிக்கும் செய்கையை யார் தூண்டினாலும் விலகியிருங்கள். வெற்றி பெறுவீர்கள். பணியில் பாராட்டு வரும்.

**சிம்மம்**
மகம் நல்லவர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். மனதில் காதல் பிறக்கும். தேவையில்லாமல் குழப்பம் அடையாதிருங்கள். உற்றவருக்கு உங்கள் மீது இருந்த வருத்தம் நீங்கும். சேமிப்பீர்கள்.

**கன்னி**
அலுவலகத்தில் உங்களை நம்பி முக்கியபொறுப்புகளை ஒப்படைப்பார்கள். நண்பருக்கு உதவிக்கரம் நீட்டி நெகிழ வைப்பீர்கள். திருமணம் கைகூடும். குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும்.

**துலாம்**
சம்பளம் உயரும். குடும்ப ஒற்றுமை மகிழ்ச்சி தரும். மனம் நிறைவடையும். பிரிந்த உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள். நியாயமான தைரியம் கூடும். அலுவலகப் பணி மகிழ்வாக நடக்கும்.

**விருட்சிகம்**
நட்பு சிறப்பாக அமையும். பாராட்டுப் பெறுவீர்கள். முன்னேற்றம் வரும். பல நாள் கழித்து நண்பர் தொடர்பு கொள்வார். எதிர் பார்க்காத சிலர் முன்வந்து உங்கள் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருப்பர்.

**தனுசு**
உடல்நலக் கோளாறுகள் நீங்கும். செலவுகள் குறைந்து நிம்மதி வரும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் எதிர்கால நன்மைக்கு வழியாகும். கடந்த கால மனக்குறைகள் மெல்ல நீங்க ஆரம்பிக்கும்.

**மகரம்**
எடுத்த விஷயத்தில் முயற்சியுடன் முன்னேறுவீர்கள். பணியிடத்து சூட்சுமங்களை அறிவீர்கள். நிம்மதியான நாள். மேலதிகாரிகளிடம் பேசும்போது அறிவாற்றல் வெளிப்படும்.

**கும்பம்**
புதிய நட்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டாம். குடும்பத்தில் சிகிச்சையில் முற்றிலும் குணமடைவார். வெளிநாட்டுப் பயணத்தில் குறுக்கிட்ட சிக்கல்கள் தீரும். சுபசெய்தி வரும்.

**மீனம்**
யாரையும் அதிகம் நம்பாதீர்கள். வீண் பொழுது போக்குகள் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுங்கள். சகோதரருக்கு உதவுவீர்கள். நிம்மதியான நாள். அதிர்ஷ்டம் வாய்ப்புண்டு.

# தமிழக மீனவர் மீது இலங்கை கடற்படை தாக்குவதை தடுக்க நடவடிக்கை தேவை

## மோடியிடம் நேரில் வலியுறுத்திய எடப்பாடி, பன்னீர்

புதுடெல்லி, ஜூலை 27

அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி மற்றும் அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ பன்னீர் செல்வம் ஆகியோர் நேற்று புதுல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப்பேசினர். இந்த சந்திப்பில் தமிழக அரசியல்சூழல் உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்து பேசப்பட்டு இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதன்போது இந்தியப் பிரதமரிடம் அவர்கள் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


கோப்புப் படம்

சந்திப்புக்கு பிறகு எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், “அதிமுகவில் எந்த தொண்டருக்கும் அதிருப்தி இல்லை. சட்டப்பேரவை தேர்தலில் பிரசாரம் செய்ததற்காக பிரதமரிடம் நன்றி தெரிவித்தோம்.

தமிழகத்திற்கு தேவையான தடுப்பூசிகளை வழங்க பிரதமர் மோடியிடம் வலியுறுத்தினோம். மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசுக்கு அனுமதி தரக்கூடாது என்று பிரதமரிடம் வலியுறுத்தினோம். கோதாவரி-காவிரி நதி நீர் இணைப்பு திட்டத்தை செயல்படுத்த கோரினோம். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க வலியுறுத்தினோம்” என்றார்.

# பகைக்காத அரசியல் செய்யாது பா.ஜ.கவை எதிர்க்க மு.க.ஸ்டாலின் முன்வர வேண்டும்


## பிழைப்புவாத அரசியல் வேண்டாம் என சீமான் அறிக்கை

சென்னை, ஜூலை 27

“பா.ஜ.க.வை வலிமை கொண்டு மூர்க்கமாக எதிர்த்து அரசியல் செய்யாது, பா.ஜ.க. செய்யும் அரசியலுக்குள் கரைந்து போகும் தி.மு.க.வின் செயல்பாடுகள் யாவும் வழமையான பிழைப்புவாதமாகும்” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சீமான் இது குறித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

“தமிழகத்தில் தனித்துவ வலிமையில்லாத நிலையில் அ.தி.மு.க.வின் தோளேறி பின்வாசல் வழியாக ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வை முதன்மை எதிரியாகக் கட்டமைத்து, அதனையொட்டிய பரப்புரைகளை முன்வைத்து, ஆட்சி அதிகாரத்திற்கு வந்த



தி.மு.க., இன்றைக்கு பா.ஜ.க. வகுத்த பாதையில் செல்வதும், அவர்களை மென்மையானப் போக்கோடு அணுகுவதும் பெருத்த ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது.

பா.ஜ.க.வை வலிமை கொண்டு மூர்க்கமாக எதிர்த்து அரசியல் செய்யாது, பா.ஜ.க. செய்யும் அரசியலுக்குள் கரைந்துபோகும் தி.மு.க.வின் செயல்பாடுகள் யாவும் வழமையான பிழைப்புவாதமாகும். இந்திய அரசியலமைப்பு சாசனத்தில் கூறப்பட்ட ‘ஒன்றியம்’ எனும் சொல்லைப் பயன்படுத்தியதைத் தாண்டி தி.மு.க. அரசு, பா.ஜ.க.வை எதிர்த்து வீரியமாய்ச் செய்திட்ட அரசியலென்ன?. பா.ஜ.க.வை பகைக்காது அரசியல் செய்ய முனைகிறார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகவே, இனிமேலாவது, ‘ஒன்றியம்’ எனும் வார்த்தையைக்கூறியே, ஒப்பேற்றிவிடலாம் என எண்ணாமல், மேற்கு வங்காள முதல்-மந்திரி மம்தா பானர்ஜியைப் போல பா.ஜ.க.வை எதிர்க்க முன்வர வேண்டும், நாசகாரத் திட்டங்களிலிருந்தும், சட்டங்களிலிருந்தும், தமிழ்நாட்டைப் பேணிக்காக்க வேண்டும்” என அவர் கூறியுள்ளர்.

# சென்னை வரும் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று ஆராய்வு

சென்னை, ஜூலை 27

சட்டசபையில் கருணாநிதியின் உருவப்படம் திறப்பு விழாவில் பங்கேற்க சென்னைக்கு வரும் இந்திய ஜனாதிபதிக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தலைமையில் நேற்று நடந்தது.

சென்னை தலைமைச் செயலகத்தில் வருகிற 2 ஆம் திகதி நடக்கவிருக்கும் சட்டசபை நூற்றாண்டு விழாவில் முன்னாள் முதல்-அமைச்சர் மு.கருணாநிதியின் முழுஉருவப்படம் திறப்பு விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கலந்து கொண்டு கருணாநிதியின் உருவப்படத்தை திறந்து வைக்கிறார்.

இந்த விழாவுக்கு கவர்னர் பன்வாரிலால் புரோகித் தலைமை தாங்குகிறார். சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தலைமைச்செயலாளர் வெ.இறைன்பு உள்ளிட்ட அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்கள் உள்பட பலர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

விழாவுக்கான ஏற்பாடுகள் தலைமை செயலக அதிகாரிகள் செய்து வருகின்றனர். இந்தநிலையில் ஜனாதிபதியின் வருகைக்கு ஒரு வாரம் மட்டுமே இருக்கும் நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.

இந்தநிலையில் ஜனாதிபதி வருகையையொட்டி பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு தலைமையில் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது.

# இந்தியா, சீனா, ஐரோப்பாவுடன் நாட்டுக்கு நல்லுறவு வேண்டும்!

## ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

கொழும்பு, ஜூலை 27


**சீனாவின் நல்ல திட்டங்களை ஏற்றுக்கொண்டும் கெட்டவற்றை நிராகரித்தும் சீரான வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடிக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.**

இதேவேளை இலங்கை அரசாங்கம் இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பாவுடன் ஒரு நல்ல உறவைப் பேண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு தேவைப்படுவது பொதுவான எதிர்க்கட்சி கூட்டணி அல்ல, மாறாக நாட்டை கொண்டு நடத்த நீண்டகாலக் கொள்கை கட்டமைப்பு என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சரியான கொள்கைக் கட்டமைப்பை நிறுவ தவறியமையே நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற பல நாடுகளைப் போலவே அரசமைப்பால் பாதுகாக்கப்படும் பொதுவான கொள்கைகள்



நாட்டுக்கு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## மேலுமொரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு வந்தன

கொழும்பு, ஜூலை 27

நாட்டுக்கு மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 90,000 பைசர் தடுப்பூசிகள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பைசர் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை முதல் டோஸாகப் பெற்றவர்களுக்கு 2 ஆவது டோஸாக வழங்கப்பட்டது.

இருப்பினும் மேலும் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிகள் விரைவில் பெறப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தத்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 3 இலட்சத்துக்கு மேற்பட்டோருக்கு இலங்கையில் ஞாயிறன்று தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் நேற்று முன் தினம் மாத்திரம் 320,272 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் 271,402 பேருக்கு செலுத்தப்பட்டதாகவும் இரண்டாவது டோஸ் 11,485 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மொடர்னா தடுப்பூசியின் முதல் டோஸ் 37,385 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் இதுவரை 7,434,297 பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும் 1,806,612 பேருக்கு முழுமையாகவும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.



## வவுனியாவில் 38 பேருக்கு கொரோனா!

வவுனியா, ஜூலை 27

வவுனியாவில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பழைய பஸ் நிலையப் பகுதியைச் சேர்ந்த 24 பேர், சந்தை உள்வட்ட வீதியைச் சேர்ந்த 11 பேர் மற்றும் அவர்களுடன் தொடர்பிலிருந்த 03 பேர் உட்பட்டவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தொற்றாளர்களின் குடும்பத்தாரையும் தொடர்பிலிருந்தவர்களையும் தனிமைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

## சிறுவர்களை தொழிலுக்கு அனுப்பும் பெற்றோரை தண்டிக்க புதிய சட்டம்

### ஜீவன் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 27

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை எவரும் அடிமைப்படுத்த முடியாது என்பதற்காக தொழிலாளர் கட்டளைச் சட்டத்தை வலுப்படுத்த பேச்சு இடம்பெற்று வருவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தொழிலாளர் கட்டளைச் சட்டமே தற்போதும் காணப்படும் நிலையில் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்த அனுமதிக்கும் பெற்றோரை தண்டிக்கப் புதிய சட்டங்களை கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களில் பொருளாதார பிரச்சினைகள் இருந்தாலும் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது அதற்கான தீர்வு அல்ல என்றும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார்.



இதேவேளை, ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த ஹிஷாலினியின் மரணம் தொடர்பான பொலிஸ் விசாரணையில் தான் திருப்தி அடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் குறித்த சிறுமியின் உயிரிழப்பை சிலர் அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் ஜீவன் தொண்டமான் குற்றம் சாட்டினார்.

## விவசாயிகள் கோரும் காணிகளை வழங்குவதில் பல்வேறு இடர்பாடு

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட சின்னப் பல்லவராயன்கட்டு பிரதேசத்தில், விவசாயிகள் கோரும் காணிகள் தனியார் காணிகளாக காணப்படுவதனால், அவற்றை அவர்களுக்கு வழங்குவதில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படுவதாக, பூநகரி பிரதேச செயலாளர் எஸ் கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சின்னப் பல்லவராயன்கட்டு பிரதேசத்தில், விவசாயிகள் கோரும் காணிகள் தனியார் காணிகளாக காணப்படுவதனால், அவற்றை அவர்களுக்கு வழங்குவதில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படுகின்றன.

காணி நடமாடும் சேவைகளை நடத்தி அதன் மூலம் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டிலிருந்து இந்த காணிகளுக்கான முன்மொழிவுகள் வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஒரு காணி நடமாடும் சேவை ஒன்றை நடத்துவதற்கான அனுமதி கிடைத்து, அது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டாவது காணி நடமாடும் சேவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனியார் காணி என்ற அடிப்படையில் அதனை அந்த மக்களுக்கு வழங்குவதில் பிரச்னைகள் காணப்படுகின்றன. அதாவது சில காணி உரிமையாளர்கள் காணி உரிமம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்-என்றார்.

## வடக்குக்குள் நுழைந்தவர்கள் நள்ளிரவில் வழிமறிக்கப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை

வவுனியா, ஜூலை 27

தென்பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்தவர்களை ஏ-9 பிரதான நுழைவாயிலில் பொலிஸாருடன் இணைந்து வழிமறித்த சுகாதாரப் பிரிவினர் அவர்களிடம் பி.சீ.ஆர் பரிசோதனை முன்னெடுத்தனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக தென்பகுதியில் இருந்து இரவு வேளைகளில் வவுனியாவுக்கு வருபவர்களை வவுனியா ஏ-9 வீதி நுழைவாயிலான மூன்றுமுறிப்பு பகுதியில் வழிமறித்த சுகாதாரப் பிரிவினர் நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5.30 வரை பி.சீ.ஆர் பரிசோதனை முன்னெடுத்தனர்.

டெல்டா வைரஸ் தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருவதையடுத்து, அதனை வவுனியா மாவட்டத்தில் கட்டுப்படுத்துவதற்காக வியாபார நோக்கம், அலுவலகத் தேவை போன்றவற்றுக்காக வவுனியா மாவட்டத்தினுள் நுழையும் வாகனங்களில் பயணிப்போர் மற்றும் வவுனியா ஊடாக ஏனைய மாகாணங்களுக்கு செல்பவர்கள் என 300 க்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வாறு பி.சீ.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அவர்களின் பி.சீ.ஆர் முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

## வவுனியா மாவட்ட மக்களுக்கு நாளை தொடக்கம் தடுப்பூசிகள்

வவுனியா, ஜூலை 27

வவுனியா மாவட்டத்துக்கு நாளை புதன் கிழமை முதல் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நாளை புதன் கிழமை தொடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்ற தகுதியுடையவர்களின் விவரங்கள் பிரதேச செயலகத்தின் ஊடாக சேகரிக்கப்படுகின்றன.

தடுப்பூசிகளை மக்களுக்கு ஏற்றுவதற்காக பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் என்பன சுகாதாரப் பிரிவினரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்துக்கு சினோபார்ம் அல்லது பைஸர் தடுப்பூசி கிடைக்கப்பெறும் என சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 1000 நபர்கள், சுகாதார பிரிவினர், தபால் சேவை பிரிவினர், பாதுகாப்பு பிரிவினர் ஆகியோருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பிரதான வைரஸ் பரவலாக மாறி வருகின்றது டெல்டா

## விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜுலை 27**

**நாட்டில் பிரதான வைரஸ் பரவலாக டெல்டா வைரஸ் திரிபு எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் மாறும் அபாயமுள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

உலகின் ஏனைய நாடுகளில் தற்போது டெல்டா வைரஸ் பரவி வருவதை அடிப்படையாகக் கொண்டு இதனை கூற முடியுமென விசேட வைத்திய நிபுணர் கூறியுள்ளார்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி திட்டத்தில் திருப்தி அடைந்தாலும், தடுப்பூசியை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதில் தொடர்ந்தும் சிக்கல் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு தடுப்பூசி வகையையும் மாகாண மட்டத்தில் வழங்குவதற்கு பதிலாக, அதன் செயற்றிறனுக்கமைவாகவும் அதிகபட்ச வயதை கருத்திற் கொண்டும் உலக நடைமுறைகளுக்கமைவாக வழங்குவதே முக்கியமானதாகும் என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் நாட்டில் டெல்டா பிறழ்வு பரவி வரும் நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்தும் அறிவுறுத்தியுள்ளார். இதனிடையே, நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்ற கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நோய் கட்டுப்பாடு, ஆரம்ப சுகாதார சேவை இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், எதிர்வரும் நாட்களில் வைத்தியசாலைகளின் கொள்ளளவு மட்டம் வரை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

---

# ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த மேலும் இரு பெண்கள் உயிரிழந்தனர்!

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜுலை 27

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிப் பெண்களாக வேலை செய்ய மேலும் இரண்டு பெண்கள் முன்னர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். ரிஷாத் பதியுதீன் வீட்டில் வேலை செய்துவந்த பெண் ஒருவர் ரயிலில் குதித்து தற்கொலை செய்து கொண்டார் . மற்றவர் உடல்நலக்குறைவால் உயிரிழந்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த 16 வயதான சிறுமியின் மரணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டுவரும் தரகர் 11 பெண்களை ரிஷாத் பதியுதீன் வீட்டுக்கு வேலைக்கென அனுப்பியுள்ளார். அவர்களிலேயே டயகம சிறுமி உட்பட மூன்று பேர் இறந்துள்ளது தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் மற்ற எட்டு பெண்களும் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளாகியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் டயகம சிறுமி உட்பட இறந்த மூவர் தவிர ஏனைய 8 பெண்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வருணி பொகவத்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த 16 வயதான சிறுமியின் மரணம் தொடர்பிலான விசாரணைகளுக்காக மாத்தறையில் உள்ள சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றி வரும் வருணி பொகவத்த கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# தடுப்பூசி பெறாதவர்களை பாடசாலைக்கு அழைக்காதீர்

## இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 27

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலைகளால் நாளுக்கு நாள் மரணமும், தொற்றும் அதிகரித்தே செல்கின்றது எனவே தடுப்பூசி பெறாதவர்களை பாடசாலைக்கு அழைக்காதீர்கள் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாடசாலைச் சமூகம் சார்ந்த அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றாமல் பாடசாலைகளை ஆரம்பிக்கக்கூடாது என அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

அதையும் மீறி பாடசாலைகளை ஆரம்பிக்கும் நாளைத் தள்ளிப்போடுவதுபோல் அறிவித்துவிட்டு ஆசியர்களையும் மாணவர்களையும் பாடசாலைகளுக்கு வரவழைத்து காலை.7.30 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் அதிபர், ஆசிரியர், மாணவர் என தொற்றாளர்கள் இனம்காணப்படுவதோடு அபாயகரமான டெல்டா வைரஸ் ஐந்தாம் வகுப்பு மாணவனுக்கு பரவியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு பெற்றோர் மனதில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

பிள்ளைகளுக்கு கல்வி அவசியம் என்பதற்கு அப்பால் நோய் தொற்று குழந்தைகளுக்குப் பரவுவது ஆபத்தானது.

ஆகையால் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத எவரையும் பாடசாலைக்கு அழைக்க வேண்டாம் எனவினயத்துடன்கேட்டுக்கொள்கின்றோம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# சிறுவர் வன்முறைகள் குறித்து 6 மாதங்களில் 4,740 முறைப்பாடு

கொழும்பு, ஜுலை 27

சிறுவர்களை ஈடுபடுத்த முடியாத, பாதுகாப்பற்ற தொழில்களின் எண்ணிக்கையை 76 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதனை இன்னும் 02 மாதங்களில் சட்டமாக இயற்ற எதிர்பார்த்துள்ளதாக தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், பேராசிரியர் முதித்த விதானபத்திரன தெரிவித்தார்.

இதனிடையே, 06 மாதங்களுக்குள் சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் 4,740 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள், கடந்த மாதத்தில் அதிகமாக பதிவானதாகவும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறுவர்கள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவது தொடர்பில் ஆராய்வதற்காக நாடளாவிய ரீதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

---

# 245 கிலோ கேரள கஞ்சாவுடன் வடமராட்சியில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 27

சட்டவிரோதமான முறையில் கடத்திவரப்பட்ட 245 கிலோ கேரள கஞ்சாவுடன் வடமராட்சி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட வழக்கமான கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது, கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.



இதன்போது, கடத்தி வரப்பட்ட 245 கிலோ கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதுடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் காங்கேசன்துறை கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்டோரில் 57 வீதம் பேர் ஒரு தடுப்பூசியாவது பெற்றனர்

கொழும்பு, ஜுலை 27

இலங்கையில் 70 இலட்சத்துக்கும் அதிகமாக கொவிட் 19 தடுப்பூசிகள் இதுவரை நிர்வகிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை வரையான தரவுகளின் பிரகாரம் மொத்தம் 71 இலட்சத்து 14 ஆயிரத்து 87 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

நாட்டில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் 57 வீதத்துக்கும் அதிகமானவர்கள் குறைந்தபட்சம் ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இந்த வயதுப் பிரிவினரில் 15 வீதமானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுள்ளனர்.

இலங்கையில் இதுவரை 925,242 பேர் இந்தியாவின் அஸ்ட்ராசெனேகா முதல் தடுப்பூசியையும் 385,885பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

159,081 பேர் ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி முதல் தடுப்பூசியையும் 14,503 பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

சீனாவின் சினோபார்ம் முதல் தடுப்பூசியை 52இலட்சத்து 70ஆயிரத்து 508 பேர் பெற்றுள்ளனர்.

13 இலட்சத்து 93 ஆயிரத்து 94பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

அத்துடன், 126,058பேருக்கு அமெரிக்காவின் பைசர் ஒரு தடுப்பூசி நேற்று முன்தினம் வரை வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் தரவுகளில் பிரகாரம் மே 12 அன்று இலங்கையில் 10 இலட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது. ஜுன் 8 அன்று இந்த தொகை 20 இலட்சமாக அதிகரித்தது.

ஜுலை 5 ஆம் திகதி 30 இலட்சம் தடுப்பூசிகளை நிர்வகித்த மைல்கல் அடையப்பட்டது.

ஜுலை 12 ஆம் திகதி இந்த எண்ணிக்கை 40 இலட்சமாக உயர்ந்தது.

ஜுலை 15 ஆம் திகதி 50 இலட்சத்துக்கு மேல் தடுப்பூசிகளைக் போட்ட மைல் கல்லை இலங்கை எட்டியது.

ஜுலை 22 ஆம் திகதி 60 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன.

இந்நிலையிலேயே நேற்று முன் தினம் வரை 71 இலட்சத்து 14 ஆயிரத்து 87 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் தடுப்பூசி பெறத் தகுதி பெற்ற அனைவருக்கும் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் போட இலங்கை அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஹிசாலினிக்கு நீதி கோரி வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜூலை 27

சிறுமி ஹிசாலினியின் மரணத்திற்கு நீதி கோரி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பெண் உறுப்பினர்கள் மற்றும் சிவில் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று காலை குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் மரணித்த சிறுமி ஹிசாலியின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும். அரசியல் யாப்பில் 18 வயதிற்கு உட்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது என கூறப்பட்டுள்ள போதும் அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் இடைத்தரகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சட்டமியற்றும் பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகளை அதிகரிப்பதன் மூலமே இந்த நாட்டில் பெண்களுக்கு சார்பான சட்ட ஏற்பாடுகளை கொண்டு வந்து முழுமையாக நடைமுறைப்ப டுத்த முடியும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது 'அரசே ஹிசாலினியை கொன்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி நீதியை வழங்கு, பெண்களை நாட்டின் கண்களாக நினைத்து தீண்டாதிருப்போம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாது அவர்களது உரிமைகளை வழங்குவோம், சிறுவர்களுக்கான பாதுகாப்பை கட்டியெழுப்போம்' என எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் பெண் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கண்டாவளைப் பிரதேச செயலக ஊழியருக்கு கொரோனா தொற்று

## செயலகப் பணிகள் தற்காலிக இடைநிறுத்தம்

**கிளிநொச்சி, ஜூலை 27**

**கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் செயலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.**

கொடிகாமத்தைச் சேர்ந்த கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் எழுமாற்றான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு கடந்த இரவு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, நேற்று பிரதேச செயலக செயபாடுகள் இடைநிறுத்தப்பட்டு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்படுகின்றன.

இந்நிலையில் ஊழியர்களின் பி.சி.ஆர் முடிவுகள் வெளிவந்த பின்னர் பிரதேச செயலக செயல்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும், பிறப்பு மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட்ட மிக அவசியமான தேவைகளை அரச செயலகத்தின் ஊடாக பெற் றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் பிருந்தாபன் தெரிவித்தார்.

# வடக்கு மாகாண பிரதம செயலராக சமன் பந்துல சேன பதவியேற்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண பிரதமர் செயலாளராக சமன் பந்துல சேன நேற்று முற்பகல் 11:40 மணிக்கு சுபநேரத்தில் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப் பேற்றார்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய பந்துலசேன ஜனாதிபதியினால் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.



சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாணத்துக்கு பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு அரசியல் தரப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில் நேற்று தனது பதவியை பொறுப் பேற்றார்.

## மரண பரிசோதனையில் சந்தேகம்!

# ஹிஷாலினியின் பெற்றோர் நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 27

ஹிஷாலினியின் மரண பரிசோதனை தொடர்பில் தமக்கு சந்தேகம் நிலவுகின்றது. எனவே, மீள் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என ஹிஷாலியினின் பெற்றோர் தெரிவித்தனர்.

இதனை வலியுறுத்தியும், சுயாதீன விசாரணைக்கான சூழல் உருவாக்கப்பட வேணடும் எனக்கோரியும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப் பாடொன்றை பதிவு செய்தனர்.

"மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் எனது மகளை இருட்டறைக்குள் வைத்து கொடுமைப்படுத்தி யுள்ளனர். மரண பரிசோதனை நடத்திய வைத்தியர் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, மீள் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனக் கோரினோம்." - என்றும் ஹிஷாலினியின் பெற்றோர் குறிப்பிட்டனர்.

### மாணவர்களுக்கு சலுகை விலையில் முகக்கவசங்கள் வழங்க அரசு திட்டம்

கொழும்பு, ஜூலை 27

அடுத்த வாரம் முதல் பாடசாலைகள் மீண்டும் திறக்க திட்டமிடப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு சலுகை விலையில் முகக்கவசங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக முகக்கவச தயாரிப்பாளர்களுடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

# பருத்தித்துறை வைத்தியசாலை ஊழியர் ஒருவருக்கு கொரோனா!

## ஆய்வுகூடம் தற்காலிக முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

தென்மராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையின் ஆய்வுகூடச் செயல்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தொற்றுக்குள்ளான ஊழியர் வைத்தியசாலையின் ஆய்வுகூட ஊழியர் என்பதால் ஆய்வுகூடத்தில் பணியாற்றிய சக ஊழியர்களுக்கும் பி.சி.ஆர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அவர்களின் பி.சி.ஆர் முடிவுகள் வெளியாகிய பின்னரேயே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் முன்னேற்றத்தை பிரிட்டன் அங்கீகரிக்கவேண்டும்

## வெளிவிவகார அமைச்சின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை

மனித உரிமை நிலைமை தொடர்பான இலங்கையின் நிலையான, உறுதியான முன்னேற்றத்தை பிரித்தானியா அங்கீகரிக்கவேண்டிய நேரம் இது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பொருளாதாரத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நேரத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் இலங்கைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரெக்ஸிற்றுக்கு பின்னர் இலங்கை தனது பெரிய ஏற்றுமதி சந்தைகளில் ஒன்றான பிரித்தனியாவுடன் தனது வர்த்தகத்தை மேம்படுத்த எதிர்பார்த்திருந்தது என்றும் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டுக்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியைக் கொண்டு வந்த சுற்றுலாத் துறை, கொரோனா காரணமாக பதிப் படைந்தது என்றும் குறிப் பிட்டார்.



இருப்பினும் தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் தடுப்பூசி நடவடிக்கை சுற்றுலாவுக்கு மிகவும் உகந்த சூழலை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை தந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் இலங்கை நடுநிலைமையான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவதோடு, அணிசேரா கொள்கையை தொடர்ந்தும் கடைபிடிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

ஈழநாடு

# இணைய வழி கற்கையில் மலையக மாணவர்கள் முன்னுள்ள சவால்கள்



கொரோனா காலத்துடன் ஆரம்பமான இணைய வழியிலான கற்கை முறை சகல மாணவர்களுக்கும் சமமாக கிடைக்கின்றதா என கேள்வி எழுந்துள்ள அதேவேளை, அந்தக் கற்கையில் எப்படியாவது இணைந்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் கவரஜை தேடி மலை முகடுகளுக்கு செல்வதுடன், கூரைகளின் மீது ஏறி நின்று ZOOM வகுப்பில் இணைந்துக் கொள்ளும் நிலையில் இன்று பெருந்தோட்ட மாணவர்கள் பெரும் அவல நிலைக்குட்பட்டுள்ளனர்.

வசதி படைத்த மாணவர்களுக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்குமான இடைவெளி அதிகரிக்கும் சாத்தியப்பாடுகள் அதிகம். கற்றல் முறையில் இவ்வாறான சவால்களை முன்நிறுத்தி எவ்வாறு மலையகப்பெருந்தோட்டப் பகுதியில் இருந்து கல்வி கற்கும் மாணவர்கள் தங்களுக்கான சிறந்த எதிர்காலத்தை எண்ணி பயணிக்க முடியும் என்பது பலரது கேள்வியாகவும் உள்ளது.

இவ்வாறான சம்பவங்களால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் , சமூக நலன் விரும்பிகள், புத்திஜீவிகள் என பலரும் பெரும் துயரமடையும் நிலை உருவாகியுள்ளது.

ZOOM வகுப்புக்களுக்கு கவரேஜ், அந்த செயழியை இயக்குவதற்கான டேட்டா கார்ட் பெற்றுக்கொள்வது முதல் வட்ஸ்அப் மூலமாக கற்பிக்கப்படும் போது ஆசிரியர்களால் மாணவர்களுக்கு அனுப்பப்படும் பாட வேலைகள் மற்றும் பரீட்சை வினாத்தாள்கள் என்பவற்றை அதலிருந்து எடுத்து அதனை அச்சடித்து பின்னர் அதனை பூரணப்படுத்தி மீண்டும் புகைப்படம் எடுத்து ஆசிரியருக்கு அனுப்ப வேண்டிய நிலைமை.

இந்த சுற்றுக்குள் குறித்த மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் எதிர்க் கொள்ளும் சிரமங்கள் அதிகமாகவும்... ‘படிக்கிறதுக்கு பதிலா வேற ஏதாவது வேலை செய்யலாம்’ என மாணவர்கள் சளித்துக் கொள்ளும் மன நிலையும் தற்போது உருவாகியுள்ளது.

இவ்வாறான நிலைமை எதிர்கால மலையக கல்வியில் எத்தகைய தாக்கத்தை உருவாக்கும் என்பது பற்றி பார்க்க வேண்டும்...

**மலையகத்திற்கான இலவச கல்வி முறை**

இலங்கை சுதந்திரம் அடைந்தவேளை மலையக மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த பிரஜா உரிமை அதே ஆண்டு பறிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு பறிக்கப்பட்டதன் விளைவே இன்று மலையகம் ஏனைய சமூகங்கங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பின்தங்கிய நிலையில் இருக்கக் காரணமாக இருக்கின்றது.

இலவசக் கல்வியின் தந்தை என போற்றப்படும் சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரவினால் 1943இல் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச கல்வி முறைமை ஏனைய சமூகங்களுக்கு கிடைக்கப் பெற்று சுமார் 40 வருடங்களுக்குப் பின்னரே

ஜீவா சதாசிவம்

மலையகத் தோட்டப் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றது. இந்நிலையில், 1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசானதோடு தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக பொறுப்பேற்றது.

ஆனால், 1980ஆம் ஆண்டில் இருந்தே செயற்பாடுகள் நடைமுறைக்கு வந்தன. நாடளாவிய ரீதியில் தற்போது 843 பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகள் இயங்கி வருகின்றமையும் இங்கு நினைவு கூறத்தக்கது.

**இணைய வழிமுறையிலான கல்வி**

கொரொனா உருவாக்கி இருக்கும் இலத்திரனியல் கல்வி முறை போக்கினை (E- learning trend) எதிர்கொள்ள மலையகப் பெருந்தோட்ட மாணவர்களைத் தயார்செய்வதில் உள்ள சவால்களை எடுத்தாராயப்பட வேண்டிய விடயமாக உள்ளது. பொதுவாக இல்லைகள் என்ற இல்லாமை அதிகமாக இருக்கும் சமூகத்தில் வாழும் பெருந்தோட்டப்புற மாணவர்கள் பலர் இன்று இணையவழியின் ஊடாக கற்பதற்கு ஆர்வம் அதிகமாக இருந்தாலும் அதற்கான கருவி (Devices) இல்லாமல் ஏங்கித் தவிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

‘என் சக வகுப்பு தோழர்கள் இணைய வழியின் ஊடாகவே ஸ்மார்ட் போன் உதவியுடன் கற்கின்றார்கள். என்னிடம் போன் இல்லை.

“வீட்டில் உள்ள தொலைக்காட்சியை போட்டால் உரிய அலைவரிசை வேலை செய்வது இல்லை. இந்த வருடம், கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையை எழுதவுள்ள நான் எவ்வாறு பரீட்சையில் ஈடுபடுவேன். இணையவழியில் இணைந்து கற்பதற்கு ஆர்வமும் ஆசையும் இருந்தாலும் கூட எமக்கு இணைய முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளது” என்று மாணவியொருவரும், தனது ஆதங்கத்தை பதிவு செய்கிறார் .

**தகவல் வலையமைப்பும் கற்றலையும்**

மலையகப் பெருந்தோட்டப்புற பகுதியில் பெரும்பாலான பாடசாலைகளின் அமைவிடம் மலைப்பாங்கான பகுதியில் இருப்பதனால் கற்றலை (Coverage) பெரிதும் வீழ்ச்சியாகவே இருக்கும். அதேபோலவே மலையக பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்புக்களில் வசிக்கும் மாணவர்களும் இந்த கவரேஜ் (Coverage) பிரச்சினையினால் இணையவழியிலான கற்கையை ஒரு வெறுப்பாகவே கருதும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது பற்றி தரம் 12 இல் கற்கும் மாணவர் ‘இணையவழியின் ஊடாக காலை 6 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கும். ஆர்வமாக, இணைந்தாலும் கவரேஜ் போதியளவு இல்லாது இடை இடையே வருவதனால் கற்பித்தலிலும் அவ்வாறே விளங்கும். ஆசிரியர் ஏதேனும் கேள்வி எழுப்பினால் கூட பதில் சொல்ல முடியாத அவலம். தொடர்ச்சியாக இவ்வாறான நிலைமையினால் மனம் விரக்தியாக இருக்கின்றது. என கவலையடைகின்றார். இவ்வாறான நிலைமைகளில் கற்றலில் ஆர்வம் வருமா?

**நல்லாட்சியும் நவீன திட்டங்களும்**

நல்லாட்சி காலப்பகுதியில் பாடசாலைகள், கல்வியல் கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மடிக்கணினி (லெப்டப்) பெற்றுக்கொடுக்கத் தயாரான போதிலும், அப்போதைய எதிர்க்கட்சியே எதிர்த்தது. ஆனாலும் சில பாடசாலைகளுக்கு மாத்திரம் கொடுக்க கூடிய வாய்ப்பாக இருந்தது. ஸ்மார்ட் கற்றல் வகுப்புக்களும் சில பாடசாலைகளுக்கே கிடைத்து. பல பாடசாலைகள் அதனை நிராகரித்த (அரசியல் காரணங்களால்) நிலையும் அத்தருணத்தில் ஏற்பட்டிருந்தமை நினைவுகூரத்தக்கது.

**தொழில்நுட்ப அறிவு**

இது தகவல் யுகத்தில் (Informational Age) உலகம் எண்ணிமத்தால் (Digital) கட்டமைக்கப்பட்டு வருகிறது. ஆனால், மலையகப் பெருந்தோட்டப் பகுதி எந்தளவு தூரம் இணைந்து செயற்படக்கூடியதாக உள்ளது என்பது இங்கு பேசுபொருளாகவேண்டி உள்ளது.

பெரும்பாலான வீடுகளில் பிரதான



> **டேட்டா இல்லாத மாணவர்களால் இந்த இலக்கை அடைய முடியாதுள்ளது. திறமையான மாணவர்கள் முன்னேறத் துடிக்கும் மாணவர்களும் தற்போது பின்தங்கியுள்ள நிலையிலுள்ளனர். மாணவர்களுக்கு உரிய திட்டத்தினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.**

தொடர்பாடல் சாதனமாக கைத் தொலைபேசி இருந்தாலும் கற்றலுக்கான கருவியாக அதனை எவ்வாறு மாற்றிக் கொள்வது, கொரோனா காலத்தில் பிரபலமான ZOOM செயழியை உபயோகப்படுத்துவது என்பது பற்றி போதிய தெளிவின்மை மனவிரக்தியையும் ஏற்படுத்தவதாக அமைந்துவிடும். அசிரியர் - மாணவர்களுக்கிடையிலான இடைவெளியும் தற் போது அதிகரித்துள்ளது.

கல்வியமைச்சின் விஷேட நடவடிக்கைக்கு அமைவாக ஈ-தக்ஸலா- ஐ. செனல், குறிஞ்சி வானொலியில் குருகெதர என கல்வி கற்றல் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாலும் தொலைக்காட்சி வசதி அல்லது உரிய அலைவரிசையை இல்லாத மாணவர்களுக்கு இது சாத்தியப்படாத ஒன்றாகவே அமைகின்றது.

**தீர்வு**

பாடசாலை மாணவர்களுக்கு ஏனைய மாணவர்களுக்கு தொலைபேசி நிறுவனங்கள் தமது இணையத்தள சேவையை இலவசமாக வழங்குவதற்கான கொள்கையை ஆரம்பிக்க வேண்டும். பாடசாலை தற்போது இணையத்தளத்தின் ஊடாக ZOOM தொழில் நுட்பத்திலேயே செயற்படுத்தப்படுகின்றது.

டேட்டா இல்லாத மாணவர்களால் இந்த இலக்கை அடைய முடியாதுள்ளது. திறமையான மாணவர்கள் முன்னேறத் துடிக்கும் மாணவர்களும் தற்போது பின்தங்கியுள்ள நிலையிலுள்ளனர். மாணவர்களுக்கு உரிய திட்டத்தினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

தகவல் புரட்சியுகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருந்தாலும் அது பற்றி புரிதலையும் அறிதலையும் இன்னும் நம் மாணவர்களாகிய எதிர்கால சந்ததிக்கு பெற்றுக்கொடுக்காதிருப்பது வருந்தத்தக்க விடயம். பின்னிலையில் நிற்கும் இந்தச் சமூகத்தின் கல்விநிலையை அந்தச் சமூகத்தில் முன்னிலைக்கு வந்த பல்வேறு தரப்பினரும் பங்குபற்றுதல் வேண்டும். அது ஆலோசனையாக, நிதியீட்டமாக, நன்கொடையாக, தொண்டாக அமையலாம்.

பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி குழுக்கள், தனவந்தர்கள், வர்த்தகர்கள், கற்று உயர் தொழில் செய்வோர், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்துறையினர் இணைந்து பொது வேலைத்திட்டம் ஒன்று குறித்து உரையாடுவதும் செயற்படுவதும் இன்றியமையாதது. ■



# தென்னாப்பிரிக்காவில் இந்திய வம்சாவளியினர் தாக்கப்படுவது ஏன்?

ஜுபைர் அஹமது

நான்காவது தலைமுறையாக தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கைரத் திமா, டர்பன் நகரத்தின் மையத்தில் உள்ள தனது மளிகைக் கடை சமீபத்திய வன்முறையில் முற்றிலுமாக கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறுகிறார்.

"கொள்ளையர்கள் எனது கடையை காலி செய்து, வெளியேறுவதற்கு முன்பு உடைத்து நொறுக்கிச் சென்றனர்." என்று அவர் பிபிசி ஆப்ரிக்க சேவையிடம் தெரிவித்தார். "இப்படிப் பலர் தங்கள் கடைகளிலிருந்து பொருட்களை இழந்தனர்," என்று வருத்தத்துடன் தெரிவித்தார் அவர்.

சூறையாடப்பட்ட, தீ வைக்கப்பட்ட கடைகள் மற்றும் வீடுகள் பெரும்பாலானவை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பணக்காரர்களுக்குச் சொந்தமானவையே. இந்த வன்முறையின் இலக்கு தாங்கள்தான் என்று அந்தச் சமூகத்தினர் உணர்ந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 25,000 ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டதால், தற்சமயம், வன்முறை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆனால் இந்திய வம்சாவளியினரிடையே இன்னும் அச்சம் காணப்படுகிறது.

சிறுபான்மை முன்னணிக் கட்சியைச் சேர்ந்த ஷாமின் தாக்கூர்-ராஜ்பன்சி தென்னாப்ரிக்காவின் குவாஸுலு-நடால் மாகாணத்தின் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆவார். டர்பனில் இருந்து பிபிசி இந்தி சேவையுடன் பேசிய அவர், "இப்போது அனைத்துச் சமூகத்தினரும் அச்சத்தில் தான் வாழ்கிறார்கள். வன்முறை உச்சத்தில் இருந்தபோது, இந்திய சமூகத்தினரிடையே மிகுந்த அச்சம் நிலவியது. அது இயல்பானதே." என்று கூறினார்.

இந்த வன்முறையின் மையம் குவாஸுலு- நடாலில் உள்ள கடலோர நகரமான டர்பன் ஆகும். 1893 இல் மகாத்மா காந்தி இந்தியாவில் இருந்து வந்து இருந்த நகரம் இது. காந்தி பின்னர் தனது ஆசிரமத்தை அருகிலுள்ள பீனிக்ஸ் நகரில் அமைத்தார், இது சமீபத்திய வன்முறையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகமான எண்ணிக்கையில் இந்திய வம்சாவளியினர் வெளிநாட்டில், ஒரு நகரத்தில் வசிக்கிறார்கள் என்றால் அது இந்த நகரத்தில் தான்.

தென் ஆப்ரிக்காவின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா கைது செய்யப்பட்ட பின்னர், தென்னாப்ரிக்காவின் பல நகரங்களில் வெடித்த வன்முறையில் 117 பேரும் கொல்லப்பட்டனர்.

### இந்திய வம்சாவளியினரின் இழப்பு

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டின் மக்கள் தொகையில் இரண்டரை சதவீதம் மட்டுமே உள்ளனர், ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் வணிகத்தில் ஈடுபட்டுள்ள செல்வந்தர்கள். அவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் அளவு இன்னும் முழுமையாக அறியப்படவில்லை, ஆனால் இந்த கடை உடைப்புகளும் எரிப்புகளும் கொள்ளைகளும் அந்தச் சமூகத்தினரின் பொருளாதாரத்தின் முதுகெலும்பையே உடைத்து விட்டது என்பது உண்மை.

டர்பனில் கல்வி மற்றும் அரசியல் ஆய்வாளர் லுப்னா நாத்வி பிபிசி இந்தியிடம் பேசுகையில், "நிறவெறிக் காலத்தில், சில இந்தியக் குடியேற்ற நகரங்கள் அமைக்கப்பட்டன. பீனிக்ஸ் போன்ற சில இந்தியக் குடியேற்ற நகரங்களில், ஏற்பட்ட சேதம் இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சேதம் தான், காரணம், அங்கிருப்பவர்கள் பெரும்பாலும் இந்தியர்கள். ஆனால் பெரிய தொழில்துறை மற்றும் பொருளாதார பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள் அனைத்துச் சமூகத்தினருக்கும் ஏற்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.

பஞ்சீயன் சகோதரர்கள் என்ற இந்திய நிறுவனத்திற்கு ஐந்து கிளைகள் உள்ளன, அவற்றில் நான்கு கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. அதன் உரிமையாளர் தனது கடைகளில் ஒன்று கொள்ளையடிக்கப்படுவதையும் உடைத்து நொறுக்கப்படுவதையும் நேரலையில் தொலைக்காட்சியில் பார்த்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்தார்

### இந்தியர்கள் இலக்காக்கப்பட்டது ஏன்?

ஆரம்ப நாட்களில் அனைத்து சமூகங்களும் வன்முறையின் பிடியில் இருந்தன என்று கூறப்பட்டாலும், அடுத்தடுத்த தாக்குதல்களில், இந்தியர்களின் சொத்துக்கள் குறிவைக்கப்பட்டன. "ஆரம்பத்தில் இந்திய சமூகத்தின் மீது நேரடித் தாக்குதல்கள் எதுவும் நடக்கவில்லை. ஆனால் வன்முறை குடியிருப்புப் பகுதிகளில் பரவத் தொடங்கியது, இதனால் இனரீதியான பதற்றம் ஏற்பட்டது." என்று கூறுகிறார் ஷாமின் தாக்கூர்-ராஜ்பன்சி.

இந்திய சமூகம் வேண்டுமென்றே குறிவைக்கப்படவில்லை என்று லுப்னா நத்வி கருதுகிறார். "இந்தத் தாக்குதல் இங்குள்ள ஆப்ரிக்க தேசிய காங்கிரஸின் (ஏஎன்சி) அரசாங்கத்திற்கு எதிரானது, இது ஜனாதிபதி சிரில் ரமபோசாவுக்கு எதிரான வன்முறை." என்கிறார் அவர்.

தென்னாப்பிரிக்கா ஒரு வானவில் தேசம் என்று அழைக்கப்படுகிறது. காரணம், அங்கு பல சமூக, இனங்களைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், நெல்சன் மண்டேலா அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழ வலியுறுத்தினார்.

1994 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்கா முதன்முறையாக ஒரு ஜனநாயக நாடாக மாறியது, அதன் பின்னர் அனைத்து இன, சமூகத்தினரும் ஒன்றாக வாழ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் அதிக வெற்றிகளும் கிட்டியுள்ளன. ஆனால் இன்னும் தேசிய ஒருங்கிணைப்பின் பணி நிறைவடையவில்லை.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் மக்கள் தொகையில் 2.5 சதவீதம் மட்டுமே. வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை ஒன்பது சதவீதம். இந்த இனத்தின் தலைவர்கள் பல தசாப்தங்களாக தென்னாப்பிரிக்காவை ஆண்டனர். உள்ளூர் கறுப்பின மக்கள் 80 சதவீதம் பேர் இந்த நாட்டில் வாழ்கின்றனர். ஆனால் தென்னாப்பிரிக்காவில் உள்ள கறுப்பின மக்கள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு எதிராக இனரீதியாகப் பாகுபாடு காட்டுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

### இந்தியர்களுக்கு எதிரான கடும் குற்றச்சாட்டு

கறுப்பினத்தவருடனான இந்திய சமூகத்தின் உறவுகள் பொதுவாக நன்றாக இருந்தாலும், உள்நாட்டில், இரு சமூகங்களுக்கிடையில் சமூக பதற்றங்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றன. இது ஒரு முறை 1949 வன்முறையிலும், இரண்டாவது முறையாக 1985 வன்முறையிலும் வெளிப்பட்டது. ஆனால் அப்போது தென்னாப்பிரிக்கா நிறவெறி வெள்ளை இனத் தலைவர்களின் அரசாங்கங்களின் கீழ் இருந்தது.

1994 ஆம் ஆண்டில், தென்னாப்பிரிக்கா நெல்சன் மண்டேலா தலைமையில் ஒரு ஜனநாயக நாடாக மாறியது, அவர் அனைத்து சமூகங்களுடனும் நல்லிணக்கத்தை வளர்ப்பதை வலியுறுத்தினார். ஆனால் இன்று நடக்கும் வன்முறை கடந்த 25 ஆண்டுகளில் நடந்ததில்லை.

கறுப்பின மக்களிடையே இந்தியர்கள் இனவாதிகள் என்ற பொதுவான நம்பிக்கை நிலவுகிறது. ஜோஹன்னஸ்பர்க்கிற்கு அருகிலுள்ள ஸ்வெட்டோ நகரில் உள்ள ஒரு பத்திரிகையாளர் சிஸ்வே பிகோ, 'இனப் பதற்றங்கள் துடித்துக்கொண்டிருக்கும் டைம் பாம்ஹ போன்றவை என்று கூறுகிறார்.

"அவர்கள் (இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்) அரசியல் நன்மை தேவைப்படும்போது தங்களைக் கறுப்பர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள். வெள்ளை இனத்துடன் சேர வேண்டிய நேரத்தில் எங்களுக்கு எதிராகத் திரும்புகிறார்கள்" என்று பிபிசியிடம் தெரிவித்தார் பிகோ.

பாகுபாடு பார்ப்பவர்கள் எல்லா சமூகத்திலும் இருப்பதாக ஷாமின் தாக்கூர்-ராஜ்பன்சி கூறுகிறார். "இது இந்தியர்களைப் பற்றிக் கறுப்பினத்தவர்களிடையே நிலவி வரும் கருத்து என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். ஆனால் கறுப்பின மக்கள் இனவெறி கொண்டவர்கள் என்ற நம்பிக்கையும் இந்திய சமூகத்தினரிடையே உள்ளது. ஆனால் இனவெறி எல்லா சமூகத்தினரிடையேயும் உள்ளது."

அவர் மேலும் கூறுகையில், "வரலாற்று ரீதியாக இங்கு சமூகங்களுக்கிடையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது, இது 1949 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் பிரதிபலித்தது, ஆனால் இந்தச் சம்பவங்கள் அடக்குமுறை ஆட்சிகளின் கீழ் நிகழ்ந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாங்கள் இப்போது ஒரு ஜனநாயகத்தில் வாழ்கிறோம். ஜனநாயகத்திற்குப் பிறகு கடந்த 27 ஆண்டுகளில் இந்திய சமூகம் மற்றும் ஆப்பிரிக்க சமூகம் ஒன்றாக வாழ்கிறது, அவர்கள் நிம்மதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ்கிறார்கள். " என்று தெரிவித்தார்.

இந்திய சமூகத்தில் ஒரு சிலரே இனவெறி கொண்டவர்கள் என்று லுப்னா நத்வி கூறுகிறார். "இந்திய சமூகத்தில் சிறுபான்மை மக்கள் உள்ளனர், அவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் தங்களை மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று கருதி மற்றவர்களை இழிவுபடுத்த முயற்சிக்கிறார்கள், ஆனால் இங்கு வாழும் பெரும்பாலான இந்தியர்கள் மற்ற சமூகங்களுடன் ஒன்றாக வாழ்கிறார்கள்.

நிறவெறி அரசாங்கத்தை அவர் குற்றம் சாட்டுகிறார். "இனவெறி காரணமாக, வெவ்வேறு சமூகங்கள் பிரிக்கப்பட்டன. இனவெறி அரசாங்கம் வெவ்வேறு சமூகங்களிடையே பதற்றத்தை உருவாக்க முயன்றது." என்கிறார் அவர்.

சமீபத்திய வன்முறையின் போது, பல வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன, அதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் கொள்ளையர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதாகக் காட்டப்பட்டது, பெரும்பாலான கொள்ளையர்கள் கறுப்பர்கள். தென்னாப்பிரிக்க செய்தித்தாள்களிலும் இந்திய மக்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது.

### குப்தா சகோதரர்களின் பங்கும்

முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா ஊழல் குற்றத்திற்காக 15 மாத சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று வியாபாரம் செய்த குப்தா சகோதரர்களுடன் அவர் மிகவும் நெருக்கமாக இருந்தார்.

அவருக்கு எதிராக நடந்து வரும் விசாரணையில், இந்தியாவின் மூன்று குப்தா சகோதரர்களுக்கு அவர்களின் வியாபாரத்தில் அவர் பயனளித்தாரா என்பதும் கண்டறியப்பட்டு வருகிறது.

இந்த சகோதரர்களின் பெயர்கள் அதுல் குப்தா, அஜய் குப்தா மற்றும் ராஜேஷ் குப்தா. ஜூமாவுக்கு எதிரான குற்றச்சாட்டு என்னவென்றால், இந்த மூன்று சகோதரர்களையும் அவர் அரசு வளங்களை கொள்ளையடிக்கவும் அரசாங்க கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தவும் அனுமதித்தார். இந்தக் குற்றச்சாட்டுகளை ஜ/மா மற்றும் குப்தா சகோதரர்கள் மறுத்துள்ளனர்.

ஜேக்கப் ஜூமா 2018 ல் ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது, அதன் பின்னர் அவருக்கு எதிராக விசாரணை தொடங்கியது. இதற்கிடையில் குப்தா சகோதரர்கள் தென்னாப்பிரிக்காவை விட்டு வெளியேறினர். நாட்டின் நீதிமன்றத்தில் நடந்து வரும் பல வழக்குகளில் அவர்களது பெயர்கள் உள்ளன, தென்னாப்பிரிக்க காவல்துறையினர் அவர்களைத் தேடி வருகின்றனர். குப்தா சகோதரர்களுக்கு எதிரான பொது மக்களின் கோபம் இந்தியர்கள் மீது திரும்பியுள்ளது என்று கருதப்படுகிறது. குப்தா சகோதரர்கள் 1990 களில் உத்தரபிரதேசத்தின் சஹரன்பூர் நகரத்திலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்தனர். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

## பயிற்சிப் பரீட்சை - 1
## விடைத்தாள் - 2021
## வினாத்தாள் – I

**தரம் : - 5**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 9) 3 | 17) 2 | 25) 3 | 33) 2 |
| 2) 1 | 10) 1 | 18) 3 | 26) 1 | 34) 2 |
| 3) 3 | 11) 3 | 19) 3 | 27) 1 | 35) 3 |
| 4) 2 | 12) 2 | 20) 1 | 28) 1 | 36) 3 |
| 5) 1 | 13) 2 | 21) 1 | 29) 1 | 37) 3 |
| 6) 3 | 14) 2 | 22) 3 | 30) 2 | 38) 3 |
| 7) 2 | 15) 2 | 23) 2 | 31) 2 | 39) 2 |
| 8) 2 | 16) 1 | 24) 3 | 32) 3 | 40) 2 |

(40 x 2.5 = 100 புள்ளிகள்)

## வினாத்தாள் – II

01) i) கடுகண்ணாவ மலைத் தொடர்
ii) நாம் / எமக்கு
iii) தகதக
iv) பாம்புகள் வளைந்து செல்வது போல
v) கை
vi) பாம்புகள் (6 புள்ளிகள்)

02) i) வலப்பக்கமாக
ii) வளமாக்கினர் (2 புள்ளிகள்)

03) கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டால் சிறப்பாக வாழலாம் (1 புள்ளி)

04) i) ✓
ii) ×
iii) ✓
iv) × (4 புள்ளிகள்)

05) i) ஆச்சிரமம் / ஆசிரமம்
ii) ஊதாரி (2 புள்ளிகள்)

06) i) அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே!
ii) அந்தப் பாறையில் குரங்கு, மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன. (2 புள்ளிகள்)

07) i) நோயாளி
ii) சிகைக்காய்
iii) சவர்க்காரம்
iv) ஆராய்ச்சி (4 புள்ளிகள்)

08) i) அலைமோதும் போதே தலை முழுகு / காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
ii) இரக்கப் போனாலும் சிறக்கப்போ (2 புள்ளிகள்)

09) i) ஆசிரியர் எனக்குப் பரிசு கொடுத்தார்.
ii) நான் தினமும் காலையில் தண்ணீர் குடிப்பேன் (2 புள்ளிகள்)

10) தீர்க்கும் (1 புள்ளி)

11) i) Ice cream
ii) Spoon (2 புள்ளிகள்)

12) i) விளையாட்டு மைதானம்
ii) வைத்தியசாலை (2 புள்ளிகள்)

13) i) I am drinking water
ii) This is a small car (2 புள்ளிகள்)

14) i) ஒபே பாசல குமக்த? (1 புள்ளி)

15) பஸ் நிலையம் (1 புள்ளி)

16) i) இருபத்தாறாயிரத்து எண்பத்தேழு
ii) 2049 (2 புள்ளி)


17) 2605, 6078, 8607, 8706 (2 புள்ளி)

18) i) ix
ii) vi (2 புள்ளிகள்)

19) 4cm (2 புள்ளிகள்)


20) i) 1984
ii) 108 (2 புள்ளிகள்)

21)



(2 புள்ளிகள்)

22)



ஏதாவது 6 கோணிகளுக்கு நிழற்றுக. (2 புள்ளிகள்)

23) 7 (2 புள்ளிகள்)

24) i) 112
ii) 105 (2 புள்ளிகள்)

25) 96 ரூபாய் / ரூபாய் 96.00 (2 புள்ளிகள்)

26) 18 லீற்றர் 725 மில்லிலீற்றர் (2 புள்ளிகள்)

27) i) தெற்கு
ii) வீடு, பூந்தோட்டம் (2 புள்ளிகள்)

28) i) 55.00
ii) 600.00 (2 புள்ளிகள்)

29) i) 6 வரை நிழற்ற வேண்டும்
ii) 10 (2 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| 30) 2 | 38) 3 | 46) 3 | 54) 1 |
| 31) 2 | 39) 2 | 47) 1 | 55) 2 |
| 32) 1 | 40) 3 | 48) 1 | 56) 3 |
| 33) 3 | 41) 1 | 49) 1 | 57) 3 |
| 34) 1 | 42) 3 | 50) 2 | 58) 3 |
| 35) 1 | 43) 2 | 51) 2 | 59) 2 |
| 36) 2 | 44) 1 | 52) 3 | |
| 37) 3 | 45) 2 | 53) 2 | |

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

> உறுப்பெழுத்தும் நேர்த்தியையும் கவனத்தில் கொண்டு 2 புள்ளிகள் வழங்குக. (உறுப்பமைய எழுதப்படவில்லை எனில் புள்ளி வழங்க வேண்டாம்)

கல்வி tv CHANNEL
ஈழநாடு

# இலங்கையில் விரைவில் உருவாகும் 'ஆசிரியர் கொரோனாக் கொத்தணி'

## அரசு பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 27

"இலங்கையில் விரைவில் ஆசிரியர் கொரோனாக் கொத்தணி ஒன்று உருவாகக்கூடும்."

- இவ்வாறு ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஆசிரியர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு இதுவரை இரண்டு வாரங்கள் கூட முழுமை பெறவில்லை.

முதலாம் தடுப்பூசி செலுத்தப்பட்டு 6 வாரங்கள் ஆகும் போது உடலில் எதிர்ப்பு சக்திகள் உண்டாகும். எனவே, தற்போது வீதியில் கூட்டமாக இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் எந்தவொரு ஆசிரியரின் உடலிலும் கொரோனா எதிர்ப்புச் சக்திகள் உருவாகியிருக்காது.



டெல்டா திரிபு பரவிவரும் காலகட்டத்தில் ஆசிரியர்கள் மிகவும் ஆபத்தான வகையில் செயற்படுகின்றனர். இதன் பிரதிபலனாக இன்னும் ஓரிரு வாரங்களில் ஆசிரியர்கள் கொத்தணி ஒன்று உருவாகுவதை நாம் காணக்கூடியதாக இருக்கும்" - என்றார்.

இதேவேளை, கொரோனா நோய்த் தொற்று மற்றும் டெல்டா திரிபு தொடர்பில் துல்லியமாக அடையாளம் காண பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத பின்னணியில் மற்றொரு கொரோனா அலை ஏற்படக்கூடும் என்று மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (இ)

# தனிமைப்படுத்தலில் இருந்து மேலும் 6 பகுதிகள் விடுவிப்பு

கொழும்பு, ஜுலை 27

நாட்டில் மேலும் சில கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கேகாலை, இரத்தினபுரி, காலி, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த 6 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை கிழக்கு கிராம சேவகர் பிரிவின் நாயாறு மீன்பிடிப் பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் மல்விட்ட கிராம சேவகர் பிரிவின் கோலிந்தவத்த இலக்கம் 3ஆம்



பிரிவும், இரத்தினபுரி மாவட்டத்தில் பரகல கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தில் பழைய கொலனி கிராம சேவகர் பிரிவின் திவித்துர தோட்டம் தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் ஹிந்திகிவ்ல கிழக்கு கிராம சேவகர் பிரிவின் நக்கலவத்த கிராமமும், மில்லகெலவத்த கிராமமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (இ)

# சம்பளத்தை அதிகரிக்க முடியாத நிலை; ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

## அமைச்சர் பந்துல விளக்கம்

கொழும்பு, ஜுலை 27

"இலங்கை பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சந்தித்துள்ளது. இந்நிலையில், ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பை இப்போது வழங்குவது சாத்தியமில்லை. இதை ஒவ்வொரு ஆசிரியர்களும் புரிந்துகொள்ள வேண்டும்."

- இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



"ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை நான் 100 வீதம் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், நாட்டின் இப்போதைய நிலைமையில் இது சாத்தியம் இல்லை.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு உட்பட நலன்புரி நடவடிக்கைகளைச் செய்வதானால், மேலதிகமாக வரி விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

நாட்டில் மேலதிக வரி விதிப்புகளைச் செய்தால், பொது மக்களே பாதிக்கப்படுவார்கள்" - என்றார். (இ)

# சுன்னாகத்தில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜுலை 27

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுன்னாகம், கந்தரோடைப் பகுதியை சேர்ந்த த.நிரோஷன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் கொண்ட குழுவொன்று வழிமறித்து வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

அதில் படுகாயமடைந்த இளைஞரை வீதியால் சென்றவர்கள் மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (இ-03)

# கிளிநொச்சி வளாகத்தினுள் 2 புதிய குளங்கள்

கிளிநொச்சி, ஜுலை 27

கிளிநொச்சி - அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் மற்றும் தொழில்நுட்பப்பீடம் ஆகியவற்றை அண்மித்த 400 ஏக்கர் பகுதியில் புதிதாக இரண்டு குளங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், இரண்டு கோடி ரூபா செலவில் இந்த இரு குளங்களும் அமைக்கப்படவுள்ளன. சுமார் 300 அடி நீளமும், 180 அடி அகலமும், 10 அடி ஆழமும் கொண்டனவாக இந்த இரு குளங்களும் அமைக்கப்



படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர், அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல்பீடம், விவசாயபீடம் மற்றும் தொழில்நுட்பப்பீடம் ஆகியவற்றின் பீடாதிபதிகள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா குளம் வெட்டும் பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

விவசாயபீடம் மற்றும் தொழில்நுட்பபீடம் பகுதிகளில் அமைந்துள்ள பண்ணைகளுக்கான நீர்த் தேவைக்கு இந்த இரு குளங்களும் பயன்படுத்தப்படவுள்ளன. (இ - 03)

# எம்.பிக்களுக்கும் விசேட செயலமர்வு

கொழும்பு, ஜுலை 27

சர்ச்சைக்குரிய ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டவரைவு தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுப்படுத்தும் வகையில், விசேட செயலமர்வு ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறித்த சட்டவரைவு தொடர்பில் நாடு முழுவதிலும் பல்வேறு போராட்டங்களை ஆசிரிய தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்களது அமைப்புக்கள் உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

இதேவேளை, இச்சட்டவரைவு தொடர்பில் எதிர்க்கட்சியினரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருவதோடு, ஆளுங்கட்சியினர் இச்சட்டமூலத்தில் உள்ள விடயங்களை மேற்கோள்காட்டி எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து வருகிறார்கள்.

இந்நிலையில் இச்சட்டவரைவு தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுப்படுத்தும் செயலமர்வு ஒன்றை அடுத்த மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கல்வி தொடர்பான நிபுணர்கள் பலரும் இதில் கலந்துகொள்ள உள்ளனர்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் தொடர்பான இரண்டாம் நாள் விவாதம் அடுத்த மாதம் 06ஆம் திகதி நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதியம் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மாலையில் பொலிஸாரிடம் சிக்கியது!

## சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 27

வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடியவர் சில மணிநேரங்களிலேயே சுன்னாகம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மதியம் மானிப்பாய் - சண்டிலிப்பாய் வீதியின் கரையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அதன் உரிமையாளர் சென்றுள்ளார்.

மீள வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் காணாமல் போயிருந்தது. அந்த இடத்தில் சைக்கிள் ஒன்று காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை அடையாளம் கண்ட சுன்னாகம் விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார், அதனை வைத்திருந்தவரைக் கைதுசெய்து விசாரணைகளின் பின் மானிப்பாய் பொலிஸாரிடம் முற்படுத்தினர்.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மானிப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது. (இ-03)



# கர்நாடக முதல்வர் பதவியிலிருந்து அதிரடியாக விலகினார் எடியூரப்பா

பெங்களூர், ஜூலை 27

கர்நாடகா முதல்வர் பதவியில் இருந்து விலகப்போவதாக நேற்று காலையில் அறிவித்த பி.எஸ். எடியூரப்பா, தமது ராஜிநாமா கடிதத்தையும் மாநில ஆளுநரிடம் அளித்துள்ளார்.

முன்னதாக, பெங்களூருவில் உள்ள விதான் சௌதா சட்டப் பேரவை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கண்ணீர் மல்க பேசிய எடியூரப்பா, ”முதல்வர் பதவியில் இருந்து நான் விலகுவது துயரத்தால் அல்ல, இதை மகிழ்ச்சியாகவே செய்கிறேன்” என்றார்.



“மாநிலத்தில் சேவையாற்ற எனக்கு வாய்ப்பு அளித்த பிரதமர் நரேந்திர மோதிக்கும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கும் எனது நன்றியை தெரிவிக்க எனக்கு வார்த்தைகளே இல்லை. அவர்களின் விருப்பம் மற்றும் பிறரின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் விதமாக கட்சிக்காக உழைப்பேன்” என்று எடியூரப்பா உணர்ச்சிபொங்க பேசினார்.

மாநிலத்தில் வாரிசு அரசியலை ஊக்குவிக்கும் விதமாக தமது மகன் விஜயேந்திராவை துணை முதல்வராக்க எடியூரப்பா முயல்வதாகவும் மாநிலத்தில் அவரது குடும்பம் அரசு விவகாரங்களில் தலையிடுவது அதிகரித்துள்ளதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் தீவிரமாக இருந்தன. இந்த விவகாரத்தில் அவரை பாஜக மேலிடம் கடந்த வாரம் நேரில் அழைத்துப் பேசியது. பிரதமர் நரேந்திர மோதியும் அவரிடம் ஆலோசனை நடத் தினார்.

இதையடுத்து புதிய முதல்வருக்கான அறிவிப்பு விரைவில் வரும் என்று தாம் எதிர்பார்ப்பதாக தனக்கு நெருக்கமான வட்டாரங்களில் எடியூரப்பா கூறி வந்தார். ஆனால், கட்சி தலைமை முடிவை அறிவிக்கும் முன்பே தமது ராஜிநாமா அறிவிப்பை அவர் நேற்று அதிரடியாக வெளியிட்டுள்ளார்.

# அதிகரிக்கும் தலிபான் ஆதிக்கம் ஆப்கானில் ஊரடங்கு அமுல்!

காபூல், ஜூலை 27



ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை தொடர்ந்து அந்த நாட்டு அரசு நாடு தழுவிய ஊரடங்கை அமல் படுத்தியுள்ளது.

ஏற்கனவே நாட்டின் சரிபாதி பகுதியை தங்களின் கட்டுக்குள் வைத்துள்ள பயங்கரவாதிகள் முழு ஆப்கானிஸ்தானையும் கைப்பற்றும் நோக்கில் இந்த தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த சில வாரங்களில் மட்டும் ஆப்கானிஸ்தானின் பல்வேறு நகரங்கள் மற்றும் அண்டை நாடுகளுடனான முக்கிய எல்லைப் பகுதிகளை தலீபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில் தலீபான்கள் நகரங்களை ஆக்கிரமிப்பதை தடுக்கும் முயற்சியாக ஆப்கானிஸ்தான் அரசு நாடு முழுவதும் ஊரடங்கை அமல்படுத்தியுள்ளது. இரவு நேரங்களில் தலீபான்களின் நடமாட்டம் அதிகம் இருப்பதால் அங்கு இரவு நேர ஊரடங்கு அமல் படுத்தப்பட்டிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் மொத்தம் 34 மாகாணங்கள் உள்ளன. இதில் 3 மாகாணங்களுக்கு மட்டும் இரவு நேர ஊரடங்கில் விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

# ஜேர்மனியிலும் தடுப்பூசி ஏற்றாதோர் கட்டுப்பாடுகளைச் சந்திக்க நேரிடும்!

## மெர்கலின் உதவியாளர் தகவல்

பெர்ளின், ஜூலை 27

ஜேர்மனியில் தடுப்பூசி ஏற்றியவர்களை விட ஏற்றாதவர்கள் சுகாதாரக் கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் வரும் என்று அந்நாட்டு அரசின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஜேர்மனியின் 'Bild am Sonntag' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது. தொற்றுக்கள் தொடர்ந்து அதிகரித்தால் தடுப்பூசி ஏற்றாதவர்கள் - வைரஸ் சோதனைச் சான்றுகளை வைத்திருந்தாலும் கூட - மேலும் புதிய கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளவேண்டி இருக்கும் என்று அதிபர் அங்கெலா மெர்கலின் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

“இதன் அர்த்தம் தடுப்பூசி ஏற்றாதவர்கள் உணவகங்கள், சினிமா போன்ற இடங்களுக்குச் செல்வது நீண்ட காலத்துக்கு சாத்தியமாக இருக்காது என்பதாகும். ஏனெனில் தொற்று ஆபத்து மிக அதிகமாக உள்ளது. நாட்டு மக்களது சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற கடமையும் பொறுப்பும் அரசுக்கு உள்ளது” என்று அவர் கூறியிருக்கிறார்.

பிரான்ஸ் மற்றும் வேறு சில நாடுகளைப் போன்று ஜேர்மனி தடுப்பூசியைக் கட்டாயமாக்கமாட்டாது என்று அதிபர் அங்கெலா மெர்கல் ஏற்கனவே உறுதிபட தெரிவித்துள்ளார். ஆனால் சமீப நாட்களாக அங்கு புதிதாகத் தொற்றுக்கள் அதிகரித்து வருகின்றன.

ஜேர்மனி அதன் ஐரோப்பிய அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தக் கோடைகாலப்பகுதியில் குறைந்தளவு வைரஸ்தொற்றுக்களையே சந்தித்துள்ளது. ஆனால்



கடந்த இரண்டு வாரங்களாக அங்கு டெல்ரா வைரஸ் தொற்றுக்கள் அதிகரிப்பைக் காட்டியுள்ளன. அங்கு வளர்ந்தவர்களது மொத்த சனத்தொகை யில் 60.8% வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியையும் 49.1% வீதமானவர்கள் இரண்டு ஊசிகளையும் பெற்றுக்கொண் டுள்ளனர்.

ஐரோப்பாவில் முதல் நாடாக கட்டாய தடுப்பூசி, சுகாதாரப் பாஸ் என்பவற்றை உள்ளடக்கிய புதிய சுகா தாரச் சட்டத்தை பிரான்ஸ் அறிமுகப்படுத்தி உள்ளது. அதற்கு எதிராக அங்கு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

# உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு 17.67 கோடியாக உயர்வு

ஜெனிவா, ஜூலை 27

உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 17.67 கோடியை தாண்டியது.

உலகம் முழுவதும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை உருவாகி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் கொரோனா பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 19.47 கோடியை தாண்டியுள்ளது. இதன்படி உலகம் முழுவதும் தற்போது 19,47,96,457 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இது வரை 17,67,46,538 பேர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 41 லட்சத்து 74 ஆயிரத்து 644 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றுக்கு தற்போது 1,38,75,275 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 84,442 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

# பெகாசஸ் உளவு விவகாரம் விசாரணை நடத்த குழு

## மம்தா பானர்ஜி நியமித்தார்

கொல்கத்தா, ஜூலை 27

பெகாசஸ் செல்போன் உளவு விவகாரம் குறித்து விசாரணை நடத்த மேற்கு வங்காள முதல் மந்திரி மம்தா பானர்ஜி ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் குழுவை அமைத்துள்ளார்.

பெகாசஸ் செல்போன் உளவு விவகாரத்தை கண்டித்து இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. உயர் நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று அவை வலியுறுத்தின.

இஸ்ரேல் நாட்டின் பெகாஸ் என்னும் உளவுமென்பொருளைப் பயன்படுத்தி, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பத்திரிகையாளர்கள், மத்திய மந்திரிகள் உள்ளிட்ட 300 முக்கிய பிரமுகர்களின் செல்போன்களை ஒட்டு கேட்க இலக்கு வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விவகாரத்தில் மத்திய அருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டு போர்க்கோலம் பூண்டு வருகின்றன. ஒட்டு கேட்பு புகார்களை மத்திய அரும், பா.ஜ.க.வும் மறுத்து வருகின்றன. இது புனையப்பட்ட கதை, ஆதாரம் இல்லாதவை என அவை கூறுகின்றன. ஆனாலும் நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன. இதனால் பாராளுமன்ற இரு அவைகளும் முடங்கி உள்ளது. மேற்கு வங்காள முதல் மந்திரி மம்தா பானர்ஜி மாநிலத்தில் பெகாசஸ் உளவு விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த ஓய்வுபெற்ற நீதிபதிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளார். ஓய்வு பெற்ற நீதிபதிகள் எம்.வி. லோகூர் மற்றும் ஜோதிர்மாய் பட்டச்சாரியா ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அமைத்து உள்ளார்.

# தீவிரமடையும் விவசாயிகளின் போராட்டம் ஆதரவு தெரிவித்து டிராக்டரில் சென்ற ராகுல்

புதுடில்லி, ஜூலை 26

இந்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு தமது ஆதரவைத் தெரிவிக்கும் விதமாக, நாடாளுமன்றம் நோக்கி நேற்று டிராக்டர் ஓட்டிச் சென்று அனைவரது கவனத்தையும் ஈர்த்தார் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி.

பஞ்சாப் மாநில காங்கிரஸ் தலைவர் நவ்ஜோத் சித்து உள்ளிட்ட அம்மாநில எம்.பி.க்கள் சிலருடன் நேற்று காலை தமது வீட்டில் இருந்து ராகுல் காந்தி டிராக்டரில் நாடாளுமன்றம் நோக்கிப் புறப்பட்டார். இதனால், அவர் செல்லும் வழிநெடுகிலும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, “விவசாயிகள் சட்டத்துக்கு எதிராக போராடும் விவசாயிகள், அரசைப் பொருத்த வரை தீவிரவாதிகள். ஆனால், உண்மையில் இந்த சட்டங்கள் ஒன்று இரண்டு கார்பரேட் முதலீட்டாளர்களுக்கு சாதகமாகவே உள்ளன” என்று தெரிவித்தார்.




“வீதியில் இறங்கி மாதக்கணக்கில் போராடி வரும் விவசாயிகளின் கோரிக்கையை நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்லும் விதமாகவே தமது வீட்டில் இருந்து பாராளுமன்றம் நோக்கி டிராக்டர் ஓட்டி வந்தேன்” என்று ராகுல் காந்தி கூறினார்.

இதற்கிடையே, கட்டுப்பாட்டு விதிகளை மீறி பாராளுமன்ற வளாகத்தில் இருந்து ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் இருந்த பகுதி நோக்கி டிராக்டரில் வந்த ஆதரவாளர்கள் செல்ல காங்கிரஸ் எம்.பி ரந்தீப் சூர்ஜிவாலா முயன்றார்.

அவரை பாராளுமன்ற வளாகம் அருகே உள்ள இந்திய செஞ்சிலுவை சங்க தலைமையகம் அருகே வழிமறித்த காவல்துறையினர் அவரையும் சில காங்கிரஸ் பிரமுகர்களையும் கைது செய்து மந்திர் மார்க் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.



# 2021 ஐ.பி.எல் எஞ்சிய போட்டிகளுக்கான அட்டவணை வெளியானது!

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவுள்ள 2021 ஐ.பி.எல். எஞ்சிய போட்டிகளுக்கான கால அட்டவணையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

இதில் 27 நாட்களில் மொத்தமாக 31 போட்டிகள் நடைபெறும்.

கொவிட்-19 தொற்று நோயைத் தொடர்ந்து கடந்த மே மாதம் ஒத்திவைக்கப்பட்ட 14 ஆவது இந்தியன் பிரீமியர் லீக் தொடரின் எஞ்சிய போட்டிகள், சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் இடையேயான பிளாக்பஸ்டர் மோதலுடன் செப்ரெம்பர் 19 ஆம் திகதி டுபாயில் மீண்டும் தொடங்கும்.

எஞ்சிய 31 போட்டிகளில் 13 ஆட்டங்கள் துபாயிலும், 10 ஆட்டங்கள் சார்ஜாவிலும், 08 ஆட்டங்கள் அபுதாபியிலும் நடைபெறும்.

சூப்பர் லீக் சுற்றின் இறுதி ஆட்டம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரா் மற்றும் டில்லி கேப்பிட்டல்ஸ் அணிகளுக்கிடையே டுபாயில் நடைபெறும்.

அதேநேரம் தொடரின் இறுதிப் போட்டி ஒக்ரோபர் 15 டுபாயில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# பிரேமதாஸ மைதானத்தின் ஊடக அறை மூடப்பட்டது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முதல் ரி-20 போட்டிக்கு அமைக்கப்பட்ட ஊடக அறையில் அனைத்து ஊடக நடவடிக்கைகளையும் நேற்று முன் தினம் திடீரென நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஊடக அறையில் இணைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட்டின் ஊழியர் ஒருவர் கொவிட்-19 வைரஸ் பாதிப்புக்குள்ளானது உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கையை எடுக்க அறிவுறுத்தப் பட்டது.

போட்டி தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு கொழும்பு ஆர்.பிரேமதாச மைதான சோதனை மையத்தில் மேற்கொள்ளப்பட்ட விரைவான அன்டி ஜென் பரிசோதனையில் குறித்த ஊழியர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருப்பது கண்டறியப்பட்டது.

அதையடுத்தே சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல் களைப் பின்பற்றி, இலங்கை கிரிக்கெட் முதல் போட்டி யின்போது ஊடக அறையின் நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டது.

ஊடக அறை கிருமி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இரண்டாவது ரி-20 போட்டிக்காக மீண்டும் திறக்கப்ப டும் என்று இலங்கை கிரிக்கெட் நம்பிக்கை வெளியிட் டுள்ளது.

எவ்வாறெனினும் வைரஸ் தொற்றுள்ள கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழியர் தற்சமயம் தனிமைப்படுத் தப்பட்டு, சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்.

# ஒலிம்பிக் வரலாற்றை புதுப்பித்த 13 வயது வீராங்கனை!

ஜப்பானிய பனிச்சறுக்கு வீராங்கனை நிஷியா மோமிஜி ஒலிம்பிக்கின் வரலாற்றை புதுப்பித் துள்ளார்.

ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்ற இளம் வய தான தடகள வீரர் என்ற பெருமையை 13 வயதான நிஷியா மோமிஜி தனதாக்கிக் கொண்டுள்ளார்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த மற்றொரு 13 வயதான ரைசா லீலை தோற்கடித்து அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இப்போட்டியில் 13 வயதான நிஷியா மோமிஜி 15.26 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் வென்றார்,

இரண்டாவது இடத்தை வென்ற ரைசா லீல் 14.64 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் ஜப்பானுக்கு வெண்கலப்



பதக்கமும் கிடைத்ததுடன் அதனை 16 வயதான நகயாமா ஃபூனா என்ற வீரர் பெற்றுக்கொண்டார். இப்போட்டியில் அவர் 14.49 புள்ளிகளைப் பெற்றார்.



# ரி-20 தொடரை வென்றது பங்களாதேஷ்!

சிம்பாப்வே அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதி யுமான ரி-20 போட்டியில், பங்களாதேஷ் அணி 5 விக் கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது.

ஹராரே மைதானத்தில் நேற்று முன் தினம் ஞாயிற் றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக் கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மாதேவரே 54 ஓட்டங்களையும் சக்காப்வா 48 ஓட்டங் களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், சௌமியா சர்கார் 2 விக்கெட்டுகளையும் சய்பூதின், சொரிபுல் இஸ்லாம் மற்றும் சகிப் அல் ஹசன் ஆகி யோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 194 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக சௌமியா சர்கார் 68 ஓட்டங்களையும் மொஹ மதுல்லா 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், பிளெஸிங் முஸரபானி மற்றும் லுக் ஜோங்வே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வெலிங்டன் மசகட்சா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 2 விக்கெட்டு களையும் 68 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட பங்க ளாதேஷ் அணியின் சௌமியா சர்கார் தெரிவுசெய்யப் பட்டார். அத்துடன் தொடரின் நாயகனாகவும் சௌமியா சர்கார் தெரிவுசெய்யப்பட்டார்.

முன்னதாக சிம்பாப்வே அணிக்கெதிரான நடைபெற்ற டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை பங்களாதேஷ் அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையை வீழ்த்தியது இந்தியா!

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட் டியில், இந்தியா அணி 38 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

கொழும்பு- ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட் டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டு கள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சூர்ய குமார் யாதவ் 50 ஓட்டங்களையும், ஷிகர் தவான் 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், துஷ்மந்த சமீர மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டு களையும் சமிக்க கருணாரத்ன 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

குறிப்பாக இப்போட்டியில் துஷ்மந்த சமீர வீசிய முதல் பந்திலேயே பிரத்வீ ஷா, விக்கெட் காப்பாளரி டம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்மூலம் ரி-20 கிரிக்கெட்டில் இதுவரை முதல் பந்திலேயே விக்கெட் இழக்காத இந்தியா அணி, முதல் முறையாக முதல்பந்திலேயே விக்கெட்டை இழந்தது.

இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, 18.3 ஓவர்கள் நிறைவில் 126 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா அணி 38 ஓட்டங் களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சரித் அசலங்க 44 ஓட்டங்களையும் அவிஷ்க பெனாண்டோ 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், புவ னேஸ்வர் குமார் 4 விக்கெட்டுகளையும் தீபக் சஹார் 2 விக் கெட்டுகளையும் குர்ணல் பாண்ட்யா, வருண் சக்ரவர்த்தி, யுஸ்வேந்திர சஹால் மற்றும் ஹர்திக் பாண்ட்யா ஆகி யோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 3.3 ஓவர்கள் வீசி 2 உதிரிகள் அடங்காக 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியக் கிரிக் கெட் அணியின் வேகப்பந்துவீச்சாளர் புவனேஸ்வர் குமார் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி, இன்று கொழும்பு- ஆர். பிரேமதாஸ மைதா னத்தில் நடைபெறவுள்ளது.



ஈழநாடு



# அடிபணியாத ஊடக அறத்தை அறிமுகப்படுத்தியர் மகேந்திரன்!

இரங்கல் செய்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

கொழும்பு, ஜுலை 27

"கப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் ஆர்.இராஜமகேந்திரன், அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவராவார்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி., அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எம்.பி. ஆகியோர் கூடடாக வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

"கப்பிடல் மகாராஜா நிறுவனத்தின் தலைவர் ஆர்.இராஜமகேந்திரனின் இழப்புச் செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. தனது 16 வயதிலே கப்பிடல் மகாராஜா நிறுவனத்தில் தனது தந்தையின் வழிகாட்டலில் வேலையை ஆரம்பித்து, 21 வயதில் அவரது தந்தையின் இழப்பின் பின்னர், சகோதரர்களுடன் இணைந்து செயல்படுத்தி வர்த்தக உலகத் தில் ஒரு ஜாம்பவானாக அவர் வலம் வந்திருந்தார். இலங்கையின் அனைத்து வர்த்தகத் துறைகளிலும் தாக்கத்தைச் செலுத்தக் கூடிய அளவுக்கு கப்பிடல் மகாராஜா கட்டமைப்பை அவர் பரவலாக்கியிருந்தார்.

இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் கூட, போட்டிபோடக்கூடிய அளவுக்கு மிகவும் முன்னேற்றகரமான மிகப்பெரிய கட்டமைப்பாக தனது நிறுவனத்தை நிலை நிறுத்தியிருந்தார்.

ஊடகத்துறையிலும் கால் பதித்த இராஜமகேந்திரன், அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவராவார்.

இந்த நாட்டினுடைய ஊடகங்கள், ஒன்றில் அரச தரப்பாலோ அல்லது வேறு தரப்புக்களாலோ கையாளப்படும் அரசியல் பின்னணியில் இயங்கி வந்தபோது, நடுநிலை வகிக்கக் கூடிய வகையில், ஆட்சியில் இருக்கும் தரப்பையும் தட்டிக் கேட்கக் கூடிய, அடிபணியாத ஊடக அறத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது இராஜமகேந்திரன் தலைமையில் இயங்கக்கூடிய சக்தி, சிரச, நியூஸ் பெஸ்ட் நிறுவனங்களுக்கு தனித்துவமான இடமுண்டு.

ஊடக அறத்தைப் பேணி வளர்ப்பதில் இராஜமகேந்திரன் அளப்பெரிய பங்காற்றியுள்ளார். அப்போதைய சூழலில் ஏனைய பல ஊடகங்களும் எம்மைப் புறக்கணித்த போதும், அப்படியான ஒரு வாய்ப்பை சக்தி நிறு வனம் வழங்கிய மையை நன்றியுடன் நினைவுகொள்கின் றோம். இராஜமகேந்திரனது தலைமையில் கப்பிடல் மகா ராஜா நிறுவனத்தால் கடைப் பிடிக்கப்பட்ட இந்த ஊடக அறமானது ஒரு நாட்டினது ஜனநாயக தன்மைக்கு அத்தியாவசியமானதாகும்.

இராஜமகேந்திரனின் இழப்பு, இந்த நாட்டின் ஜனநாயகத்தையே கேள்விக் குட்படுத்தப்போகின்றதோ? என்று சிந்திக்கக்கூடிய அளவுக்கு, பெரும் சோகத்துக்குள் எம்மைத் தள்ளியுள்ளது. அந்தளவுக்கு ஜனநாயகத்துக்கும், உண்மைக்கும், நேர்மைக்குமாக இராஜமகேந்திரனது பங்கு அமைந்திருந்தது."- என்றுள்ளது. (இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 05 - 05 - 1937

உதிர்வு 26 - 07 - 2021

## திருமதி நடராசா இலட்சுமிப்பிள்ளை

தெல்லிப்பழை, விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை கட்டைபறிச்சானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இலட்சுமிப்பிள்ளை 26.07.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் துரையர் – நாகம்மாவின் மூத்த புதல்வியும், அமரர் து.திருநாவுக்கரசு, து.மாணிக்கவாசகர், ந.நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் க.நடராசாவின் அன்பு மனைவியும், அமரர் புஸ்பராஜா (தபால் அதிபர் அளவெட்டி), குணரத்தினம் (நீர்கொழும்பு), கிருபானந்தம் (ஆசிரியர் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை உமாசங்கர் (ஆசிரியர் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி, சிவநேசன் (வசந்தன் – அவுஸ்திரேலியா – 061421100668), உருத்திரன் (இத்தாலி), செ.புஸ்பமலர், பத்மராணி, கீதராணி, அமரர் நகுலேஸ்வரி, சாந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர், வசந்தமாலா, துசித்தா, ஜெயவதனி, மேரிவினோதினி, அபிராமி (கமநல அபிவிருத்தி திணைக்களம் திருகோணமலை) செல்வரத்தினம், விஜயகுமார், செல்வரட்ணம், சிறிக்குமார், இரவீந்திர தாசன் ஆகியோரின் மாமியாரும், அன்னார் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெல்லிப்பழை விறங்கொடையில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று (26.07.2021) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தெல்லிப்பழை கிழக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

# சட்டவிரோத காணி அபகரிப்பை உடன் நிறுத்தக்கோரி முசலியில் ஆர்ப்பாட்டம்



மன்னார், ஜுலை 27

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி முசலி பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வை.எப்.சி. அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூனாட்சிகுளம், பண்டாரவெளி போன்ற பகுதிகளில் உள்ள அரச காணிகள் சிலரால் பலவந்தமாக அபகரிக்கப்படுகின்றன எனவும், இதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்குக் காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த காணிகளை விடுவிக்கச் செய், ஏழை விவசாயிகளுக்கு காணிகளை பகிர்ந்து அளிக்கவும், காணி அத்துமீறலை உடனே நிறுத்து, அடாவடி காணி பிடித்தலை உடனடியாக நிறுத்தவும், அடாத்தாக காணி பிடித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் என்று பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அதில் கலந்துகொண்டோர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை முசலி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர். (இ-3)

# வல்வெட்டித்துறையில் மேலும் 16 பேர் கொரோனா வைரஸுடன் அடையாளம்

வடமராட்சி, ஜுலை 27

யாழ், வடமராட்சி, வல்வெட்டித்துறை - ஆதிகோயிலடிப் பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட எழுமாறான அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் நேற்று 166 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே 16 பேருக்குக் கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. வல்வெட் டித்துறை வட மேற்கு (ஜே/388) கிராம அலுவலகர் பிரிவே கொரோனா பரவலால் முடக்கப்பட்டுள்ளது.

அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர். (இ-2-3)

# தெதுருஓயாவில் மூழ்கி இருவர் பரிதாப மரணம்

குருநாகல், ஜுலை 27

குருநாகல் மாவட்டம், கொபெய்கனே, எம்பலயாகம பிரதேசத்தில் தெதுருஓயாவில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று கொபெய்கனே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 18, 24 வயதுடைய இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

குறித்த இருவரும் வார இறுதியில் தமது உறவினர்களின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில், நீராடச் சென்றபோதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக நிகவரெட்டிய ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொபெய்கனே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 151 பேர் கைது

கொழும்பு, ஜுலை 27



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 151 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 52 ஆயிரத்து 152 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் 3 ஆயிரத்து 741 வாகனங்களில் வந்த 5 ஆயிரத்து 121 பேர் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் பயணக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிப் பயணித்த 160 பேர் அவர்கள் பயணித்த வாகனங்களில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பல்வேறு சந்தர்ப்பங்கள்ளில் பொது விடங்களில் சிலர் முகக்கவசம் அணியாது பயணிப்பது தெரியவந்துள்ளது.

முகக்கவங்களை தம்வசம் வைத்துக்கொண்டு முகக்கவசத்தை அணியாது சுற்றித்திரிவது தெரியவந்துள்ளது. எனவே, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இது தொடர்பில் கண்டறிவதற்காக விசேட விசாரணைக் குழுவை நியமிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். தொடர்ச்சியாக இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது" - என்றார். (இ)

## எனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம செயலாளர் அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் வவுனியாவில் கடந்த ஒன்றரை வருடங்களாக அரச அதிபராகக் கடமை யாற்றியிருந்தேன். வவுனியாவைப் பொறுத்தவரை தமிழ், சிங்கள இனத்தைச் சேர்ந்த அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மக்கள் வசித்து வருகின்றார்கள். அவ்வாறான பிரதேசத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக நான் கடமையாற்றி இருந்தேன்.

எனவே, நான் ஒரு சிங்களவனாக இருந்தாலும் தமிழ் பிரதேசத்தில் கடமை யாற்றுவதில் எந்தவித இடையூறும் இருக்காது எனக் கருதுகின்றேன். அதாவது நான் மக்களோடு கடமை யாற்றும்போது மொழி ஒரு பிரச்னை யாக இருக்காது" - என்றார். (இ- 3)

## 30ஆண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகி யுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 147 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 30 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இ)

## குடாநாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்துமாறு கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்திலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யாழ். மாவட்டத்துக்கு விரைவில் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட இருக்கின்றார் என நான் அறிந்துகொண்டேன்.

நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ்.மாவட்டத்தில் 95 வீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர். மேலும், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர்.

இந்தப் பின்னணியில் தமிழ் பேச தெரியாத ஒரு அரச உத்தியோகத்தரை மாவட்ட செயலாளராக/அரச அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் அவருடனான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க அரசு முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவையும், மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வு செய்து, மேற்குறித்த விடயங்களைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்டத்தின் மாவட்ட செயலாளராக/அரச அதிபராக அனுபவமும் செயற்திறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறு நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்" - என்றுள்ளது.(இ)

## ஹிஷாலியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் மரணம் தொடர்பில் சுயாதீன விசாரணைக்கான சூழுல் உருவாக்கப்பட வேண் டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

"மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் எனது மகளை இருட்டறைக்குள் வைத்து கொடுமைப்படுத்தியுள்ளனர். மரண பரிசோதனை நடத்திய வைத்தியர் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, மீள் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனக் கோரினோம்" என்று ஹிஷாலினியின் பெற்றோர் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (இ)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் சந்திப் பில் பேசியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் பதிவாகும் தினசரி கொரோனாத் தொற்றாளர்களில் ஒரு குறிப்பிட்ட வீதமானவர்களில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கும் வாய்ப்புள்ளது.

தற்போது டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்ட 68 பேரும் பலரின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் இனங்காணப்பட்டவர்கள். ஆனால், இந்த 68 ஐ விட அதிக எண்ணிக்கையிலானவர்கள் நமது சமூகத்தில் இருப்பார்கள்.

நேற்று (நேற்றுமுன்தினம்) நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் 1,666 பேரில் டொல்டா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களும் அடங்குகின்றனர். எனினும், அதனை அறிவதற்கு ஒவ்வொருவரையும் அதற்கான விசேட பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

இது சாத்தியமற்றது. எனவே அனைவரும் டெல்டா வைரஸ் கொத்தணிகள் உருவாகாமல் இருக்கும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" - என்றார். (இ)

## ரிஷாத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிஷாத் பதியுதீனின் மனைவி, அவரின் மாமா மற்றும் சிறு மியை அந்த வீட்டுக்கு பணி யாளராக அழைத்துச் சென்ற தரகர் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரிஷாத் பதியு தீனின் வீட்டில் சிறுமிக்கு முன்னர் பணியாற்றிய 22 வயது யுவதி ஒருவரை பாலியல் துஷ் பிரயோகத்துக்கு உட்படுத்திய தாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட் டுள்ள ரிஷாத் பதியுதீனின் மைத்துனரையும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைப்பதற்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டிருந்த இவர்கள் கடந்த சனிக்கிழமை நீதிமன்ற அனுமதியுடன் 48 மணித்தியாலங்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு விளக்கமளித்தனர்.

இதன்படி கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிட்ட நீதிவான், இறுதிக்கிரியையின் பின்னர் புதைக்கப்பட்ட சிறுமியின் உடலைத் தோண்டியெடுத்து மீண்டும் பிரேத பரிசோதனை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டார். (இ)

## ரிஷாத்திடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவு தொடர்பில், ரிஷாத் பதியுதீன் எம்.பியிடம் வாக்குமூலம் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று பொரளை பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிவான் விசாரணை கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நெரஞ்சலா டி சில்வா முன் திரும்ப எடுக்கப்பட்டபோது, பொலிஸார் இந்த விடயத்தை "பி" அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (இ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாப் பேரிடர் காரணமாக அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று படிவங்களை விநியோகித்து வாக்காளர்களைப் பதிவு செய்யும் வழமை யான நடைமுறை இந்த ஆண்டு நடைபெறாது என்றும் தகுதி பெற்ற வாக்காளர்கள் தாமா கவே கிராம சேவையாளரிடம் சென்று படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும் என்றும் தெரிவித் துள்ளது. எனவே, பதிவு செய்வதற்கு இன்னும் இரண்டொரு தினங்களே இருக்கும் நிலையில் புதிய வாக்காளர்கள் இந்தக் காலக்கெடுவைத் தவற விட்டுவிடவேண்டாம் எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் மகேசன் கஜேந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

"வாக்குரிமை இலங்கைக் குடிமகனாகவுள்ள ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமையாகும். இலங்கையில் வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டு வரும் ஜூன் 01 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியடைந்த இலங்கைக் குடிமகனாக வுள்ள எவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் மாத்திரமே இவ்வாக்குரிமை உறுதி செய்யப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடையும் போது தேர்வாகும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறைவடையும். உதாரணமாக, 1989ஆம் ஆண்டு யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்ததன் காரணமாகத் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7ஆகக் குறைவடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி யாழ் மாவட்டத்துக்கு 6 பாராளுமன்ற ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்லுதல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களில் மாத்திரம் குறைவை ஏற்படுத்தும் ஒன்றல்ல. மாவட்டத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி, மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றிலும் குறைவை ஏற்படுத்தும் ஒன்றாகும். அந்தவகையில், வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரும் தங்களை வாக்காளராகப் பதிவு செய்தல் ஒரு தேசிய கடமையாகும். எனவே, யூலை 30 ஆம் திகதிக்கு முன்பாக புதிய வாக்காளர்கள் அனைவரும் தமது பகுதிக் கிராமசேவையாளரிடம் சென்று தவறாது பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# உபேக்ஷா கைது

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடிகை உபேக்ஷா சுவர்ணமாலி (பபா) கைதுசெய்யப்பட்டுள் ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார அவரை கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி - நுகவெல வீதியில், நுகவெல பிரதேச செய லகத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மீது உபேக்ஷா பயணித்த வாகனம் மோதியுள்ளது.

இதனையடுத்து, மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் பேராதெனிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்ட உபேக்ஷா சுவர்ணமாலி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 98 ஆயிரத்து 169 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,405 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 69 ஆயிரத்து 7 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கரவெட்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுமாறாக 179 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 49 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆலயத் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என அறியப்பட்ட நிலையில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அதிகம் அடையாளம் காணப்பட்டுள்ளதால் கரவெட்டி தெற்கு கிராமத்தைத் தனிமைப்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். (இ)

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்தளவான பணியாளர்கள் பணிக்கு அழைக்கப்படுவதன் காரணமாக, நிறுவன நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக அமைச்சின் செயலாளர்கள் பலர் அறிவித்துள்ள நிலையிலேயே எதிர்வரும் முதலாம் திகதி முதல் அரச ஊழியர்கள் அனைவரையும் பணிக்கு அழைப் பது குறித்து ஆலோசிக்கப்படுவ தாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து அரச ஊழியர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அழைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுசென்றுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களின் ஊழியர்கள், தற்போது வாரத்தில் இரண்டு நாட்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தனியார் நிறுவனங்கள் பலவும் இதேபோன்ற நடைமுறையையே தற்போது பின்பற்றிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## மரண அறிவித்தல்கள்

மலர்வு
26
-
04
-
1963



உதிர்வு
26
-
07
-
2021

### அண்ணாமலை இரத்தினசிங்கம்

இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்ணாமலை இரத்தினசிங்கம் நேற்று (26-07-2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை சிவயோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தவயோக மலர் (தேவி) அவர்களின் அன்புக் கணவரும்,

திவாகரன், சாருசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன், ஜஸ்வரியாவின் மாமனாரும், சுருதியின் பாசமிகு பேரனும், ஆனந்தமகேஸ்வரி, இரத்தினசோதி, விசியகுமார்,மோகனராஸ், யோகநாதன், குமுதினி, குமுதன், முகுந்தன் ஆகியோரின் சகோதரரும், ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று செவ்வாய்க் கிழமை (27.07.2021) அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொடிக்காட்டு இந்து மயா னத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மலர்வு
14
-
09
-
1945



உதிர்வு
26
-
07
-
2021

### கிட்டினர் ஏகாம்பரம்

யாழ். உடுப்பிட்டி, இலந்தைக்காட்டைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினர் ஏகாம்பரம் நேற்று (26-07-2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கிட்டினர் இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மூன்றாவது புதல்வரும், காலஞ் சென்றவர்களான தம்பையா சரஸ்வதி தம்பதிகளின் பாச மிகு மருமகனும், ஏகாம்பரம் யோகாம்மா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நல்லையா, பவளம், திருமேனி, பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மரத்தினம், சீவரத்தினம், காலஞ்சென்ற குணரத்னம், புவனேஸ்வரி, யோகேஸ்வரி, தங்கேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யோகதாஸ்(சுவிஸ்), சிவந்தினி, சாந்தினி (அவுஸ் திரேலியா), தர்சினி (லண்டன்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலையமுதா (சுவிஸ்), சத்தியராஜா, ரகு (அவுஸ்திரேலியா), குசலன (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாயித்தியன், சயீவன், சியானி, ஆஸ்மி, அஸ்வித், அனு ஜன், கர்சித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
**சுதாகரன் - மகன்**
Mobile : +447577973634
**யோகதாஸ் - மகன்**
Mobile : 0041765330757
**ரகு - மருமகன்**
Mobile : 0061451832408
**சத்தியராஜா - மருமகன்**
Mobile : +94774171973
**குசலன் - மருமகன்**
Mobile : +447481952793

தகவல்:
**குசலன் (மருமகன்)**

# மலையகத்தின் செயற்பாட்டாளர்கள் அனைவரும் கூட்டிணைந்து சவால்களைச் சந்திக்க வேண்டும்!



## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

**"மலையகத் தமிழ்ச் சமூகம் இன்று சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளவும், சமூகம் எழுச்சி பெறவும் மலையகத்தின் முக்கிய நான்கு சமூக கூறுகளான அரசியல் செயற்பாட்டாளர்கள், சட்டத்துறை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழில் வர்த்தகதுறை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கூட்டி ணைந்து செயற்படவேண்டும். ஒவ்வொரு தரப்பினரும் தமக்குரிய பணியை கூட்டுபொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். இதுவே மலையகத்தின் இன்றைய தேவை."**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

மலையக சட்டத்துறை மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப் பின்போது மனோ எம்.பி. மேலும் கூறியதாவது: -

"முழு இந்திய வம்சாவளி மலை யகத் தமிழர்களும் வீட்டுப் பணியா ளர்கள் அல்லர். முழு இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களும் தோட்டத்தொழிலாளர்கள் அல்லர். இப்படியான ஒரு கருத்தை ஒருசில இனவாதிகள் நிறுவ முயல்கின் றார்கள். இப்படிதான் ஒருகாலத்தில் அமெரிக்காவில் வெள்ளை இன ஆதிக்கவாதிகள், கறுப்பு இனத்த வரை சித்தரிக்க முயன்றார்கள். இது சூட்சுமம் நிறைந்த கருத்து. இலங் கையிலும் இது திட்டமிட்டு பரப் பப்படுகின்றது.

இது பற்றி நான் அப்போதே சுட்டிகாட்டி வந்துள்ளேன். அதை இப்போதும் நான் எடுத்துச் சொல் கின்றேன். முதலில் நாம் ஒன்றுகூடி இந்தக் கருத்தை முறியடிக்க வேண் டும். இதை எப்படி அமெரிக்காவில் கறுப்பு இனத்து செயற்பாட்டா ளர்கள் முறியடித்தார்களோ, அப் படியே நாமும் முறியடிக்க வேண் டும்.

மலையகத் தமிழ்ச் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு பிரிவினர் தான் இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். இவர்க ளைக் கைத்தூக்கி விட வேண்டிய கடப்பாடு, வேறு எவரையும் விட, மேற்சொன்ன மலையகச் சமூகத் தின் முன்னேறிய அரசியல், சட்டத் துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்க ளுக்கு இருக்கின்றது. இன்றைய தேவை, மலையக அரசியல், சட் டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகதுறைத் செயற்பாட்டாளர் களின் கூட்டிணைந்த செயற்பாடா கும். ஒவ்வொன்று பிரிவினரும் தமக்குரிய பணியைக் கூட்டுப் பொறுப்புடன் நிறைவேற்ற வேண் டும்.

சகோதர இனங்களைச் சார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நல்ல மனம் கொண்ட முற் போக்காளர்களை தவிர வேறு எவ ரும் எமக்கு உதவ மாட்டார்கள். எம்மை எள்ளி நகையாட மட்டுமே பலருக்கு முடியும். எம்மை அவமா னப்படுத்த மட்டுமே பலருக்கு முடி யும். ஆகவேதான் எம்முடன் எவரும் விளையாட வேண்டாம் என நான் எப்போதும் எச்சரிக்கின் றேன். எம்மை அவமானப்படுத்த நினைத்தோருக்கு பகிரங்கமாகவே நான் பதிலடி கொடுக்கின்றேன்.

பின்தங்கிய இரண்டு இலட்சம் தோட்டத்தொழிலாளர்களுக்கு, எமது நான்கு ஆண்டு ஆட்சிகாலத் தில், அதற்கு முற்பட்ட நாற்பது வருட காலத்தில் நடைபெறாத பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம். எமது மக்கள் வளர்ந்தார்கள். துரதிஷ்ட வசமாக எமது ஆட்சி இடை நின்று விட்டது. அது முடிவு இல்லை. நாம் மீண்டும் முன்பை விட பலமாக எழுந்து வருவோம். எழுதி வைத்துக் கொள்ளுங்கள்" - என்றார். (இ)

# வறுமையின் கோரப் பிடிக்குள் மக்களைத் தள்ளுகின்றது அரசு

## சஜித் அணி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 27

"வெற்றியளிக்காத இந்த அரசின் கொள்கைகளால் நாட்டு மக்கள் அனைவரும் வறுமையின் கோரப் பிடிக்குள் சிக்கப்போகின்றார்கள்."

- இவ்வாறு எச்சரிக்கை விடுத் துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக்க அபேசிங்க.

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தா வது: -

"தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 20 மாதங்களே ஆகின்றன. தற்போ தைய அரசு பதவிக்கு வந்து ஒரு வருடம் ஆகப் போகின்றது.

இந்த அரசின் வெற்றி யளிக்காத அடிப்படைக் கொள்கைகள், சாத்தியமற்ற பொருளாதாரக் கொள்கை கள், வெற்றியளிக்காத செயற் பாடுகள் காரணமாக பிறக்க இருக்கும் குழந்தைகள் முதல் வயோதிபர்கள் வரை பாரிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளனர்.

தற்போதைய அரசானது கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்க வேண்டிய போஷ ணைப் பொதியை வழங்கு வதில்லை. இதன் காரண மாக பிறக்கவிருக்கும் குழந் தைகள் மந்தபோசணைக்கு உள்ளாகின்றனர்.

அதேபோன்று சிறுவர்களுக்கு வழங்க வேண்டிய திரிபோஷாக் களும் தற்போது வழங்கப்படுவ தில்லை. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், திரிபோஷாவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கள் மூடப்பட்டுள்ளன. இதனால் சிறுவர்கள் மந்தபோசணைக்கு உள்ளாகும் நிலை அதிகரித்துள்ளது.

அதேபோன்று 43 இலட்சம் மாணவர்களின் கல்வி நிலை இரண்டு வருடங்களாகப் பாதிப்படைந்துள் ளது. அவர்களால் கல்வி கற்க முடி யாத சூழல் ஏற்பட்டுள்ளது. அதே போன்று இணையவழிக் கற்றலை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை யும் அரசு இல்லாமல் செய்துள்ளது.

சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கு மாறு கோரி சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்கள் வீதிக்கு இறங் கும் போராடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த அரசு 2020 ஜனவரி மாதம் முதல் இந்த கொடுப்பனவைப் பெற்றுக்கொடுப்பதற்கு உறுதி யளித்திருந்த போதிலும் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வாக்கு றுதி நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக ஆசிரி யர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். அதே போன்று நமது நாட்டுக்கு உணவ ளிக்கும் விவசாயிகள் வயல்களிலி ருந்து போராடும் நிலைமைக்குத் தள் ளப்பட்டுள்ளனர்" - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கண்டேன் காதலை, ரூபாய் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு